
தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 177 ஆனி 05
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, வியாழன், ஜூன் 19, 2025
சென்னை மதுரை திருச்சி கோவை நெல்லை சேலம் வேலூர் புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## இனி சமரசத்துக்கு வாய்ப்பில்லை: அமெரிக்கா-இஸ்ரேலுக்கு, ஈரானின் உச்சத்தலைவர் கமேனி எச்சரிக்கை

...2-ம் பக்கம்

## அமர்நாத் யாத்திரை பகுதிகளில் பலூன்கள், டிரோன்கள் பறக்க தடை

...3-ம் பக்கம்

## சிறிய நாடுகளுக்கான டெஸ்ட் போட்டி 4 நாட்களாக குறைப்பு: ஐ.சி.சி. தலைவர் ஜெய்ஷா ஆதரவு

...6-ம் பக்கம்





சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.217 கோடியே 98 லட்சம் மதிப்பீட்டில் 26 திருக்கோவில்களில் 49 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி கட்டுமான பணிகளை தொடங்கி வைத்து ரூ.21 கோடியே 50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள், 16 திருக்கோவில்களில் 17 முடிவுற்ற பணிகளை காணொலிக்காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மதுரை கள்ளழகர், இராமேசுவரம் உள்ளிட்ட கோவில்களில்

# ரூ.217.98 கோடி மதிப்பில் 49 புதிய திட்டப்பணிகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

### ரூ.21.50 கோடியில் 33 முடிவுற்ற பணிகளும் திறப்பு

சென்னை, ஜூன் 19-

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மதுரை கள்ளழகர், இராமேசுவரம் உள்ளிட்ட இடங்களில் உள்ள கோவில்களில் ரூ.217.98 கோடி மதிப்பீட்டிலான 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.21.50 கோடி செலவிலான 33 முடிவுற்ற பணிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

**காணொலிக் காட்சி...**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது., தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 217 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 திருக்கோவில்களில் 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள் மற்றும் 16 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**வசதிகளை மேம்படுத்துதல்....**

இந்து சமய அறநிலையத் துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**திருவள்ளூர், திருச்சி...**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பெருந்திட்டப் பணிகளின் கீழ் 86.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம், மலர்மாலை, பூஜை பொருட்கள் மற்றும் வழிபாட்டு பொருட்கள் விற்பனை நிலையம், சுதைவேலைபாடுகளுடன் கூடிய நுழைவு வாயில், அடிப்படை வசதிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம், 9 நிலை ராஜகோபுரத்தினையும், தேர்வீதியினையும் சுதைவேலைபாடுகளுடன் கூடிய இணைப்பு படி கட்டும் பணிகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், குமாரவயலூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 30.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்டப் பணிகளின் கீழ் சமுதாயக் கூடங்கள், ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி, நவீன வசதிகளுடன் கூடிய கழிவறைகள் மற்றும் குளியலறைகள், முடிகாணிக்கை மண்டபம், திருமண மண்டபம், அன்னதானக் கூடம், செயல் அலுவலர் குடியிருப்பு, திருக்குளம் சீரமைத்தல், வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணிகள்; திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 14.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமை அலுவலக வளாகத்தில் கூடுதல் நிர்வாக கட்டிடம் கட்டும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

**மதுரை, இராமேசுவரம்..**

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் 12.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு நிலை இராஜகோபுரம், ஐந்து நிலை இராஜகோபுரங்கள் கட்டுதல் மற்றும் மூன்றாம் பிரகாரத்தில் மேற்கு பகுதியில் உப சன்னதிகள் அமைக்கும் பணிகள்; விழுப்புரம் மாவட்டம், சிங்கவரம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி: இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலில் 6.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில்

(கடைசி பக்கம் பார்க்க)

# முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நான்கு துறைகளின் ஆய்வுக்கூட்டம்

### துணை முதல்வர் - அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, ஜூன் 19-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வணிக வரி மற்றும் பதிவுத் துறை உள்ளிட்ட 4 துறைகளின் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.**

முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று காலை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் முருகானந்தம், பொதுப் பணித்துறை கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா, நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கூடுதல் தலைமை செயலாளர் ச.விஜயகுமார், நிதித்துறை முதன்மை செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் த.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ஜெ.குமரகுருபரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேபோல், வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டமும், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டமும், மனிதவள மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டமும் அடுத்தடுத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

இதில், அந்தந்த துறைகளின் அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### டெல்லி, மதராசி கேம்ப் பகுதியில் வீடுகள் இடிக்கப்பட்ட

# 360 தமிழர் குடும்பங்களுக்கு தலா ரூ.8 ஆயிரம் நிவாரணம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவை அடுத்து நடவடிக்கை

சென்னை, ஜூன் 19-

**டெல்லி, மதராசி கேம்ப் பகுதியில் வீடுகள் இடிக்கப்பட்ட 360 தமிழர் குடும்பங்களுக்கு தலா ரூ.8 ஆயிரம் நிவாரணம் அவர்களது வங்கி கணக்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவை அடுத்து வரவு வைக்கப்பட்டது. மேலும் 150 குடும்பங்களுக்கு தமிழக அரசு சார்பில் முதல்வரின் உத்தரவின்படி அமைச்சர் ஆவடி நாசர் ரூ.4 ஆயிரம் மதிப்பிலான நிவாரணப்பொருட்களை நேரில் வழங்கினார்.**

தெற்கு டெல்லியின் கல்காஜி விரிவாக்கத்தில் உள்ள பூமிஹீன் முகாமில் வசிக்கும் அனைத்து குடியிருப்பாளர்களும் மூன்று நாட்களுக்குள் தாமாக முன்வந்து காலி செய்ய வேண்டும் என்று டெல்லி மேம்பாட்டு ஆணையம் அறிவித்திருந்தது. கடந்த ஜூன் 8, 9 மற்றும் 10 ஆகிய மூன்று நாட்களுக்குள் குடியிருப்பாளர்கள் காலி செய்ய வேண்டும் என்றும், தவறினால் குடியிருப்புகளுக்குள் உள்ள பொருட்களுக்கு அரசு பொறுப்பேற்காது என்றும், திட்டமிட்டபடி இடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

இதனால், டெல்லி மேம்பாட்டு ஆணையத்தின் இந்த அறிவிப்பை அடுத்து, குடியிருப்புவாசிகள் அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டனர். இருப்பினும், அரசு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீடுகள் இன்று புல்டோசர் கொண்டு இடிக்கப்பட்டுள்ளன. பூமைதின் பகுதியில் குஹி-ஹொப்ரி என்ற பகுதியில் அரசு நிலத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட சுமார் 300 வீடுகளை அதிகாரிகள் இடித்தனர்.

இதையடுத்து, டெல்லி மதராஸி கேம்ப்பில் வீடுகள் இடிப்பால் பாதிக்கப்பட்ட 370 தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்க ரூ.50 லட்சம் நிதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒதுக்கி அறிவித்தார். பாதிக்கப்பட்ட 370 குடும்பங்களுக்கும் ஒரு முறை நிதியுதவியாக தலா ரூ.8 ஆயிரம் வழங்கவும், ரூ.4 ஆயிரம் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை பிறப்பித்தார்.

இந்நிலையில், டெல்லியில் உள்ள மதராசி கேம்ப் குடியிருப்பு பகுதியில் அகற்றப்பட்டதால் பாதிக்கப்பட்ட 360 தமிழர் குடும்பங்களின் வங்கிக் கணக்கில் தலா ரூ.8000 நிவாரணத் தொகை செலுத்தப்பட்டது.

மேலும் ரூ.4000 மதிப்பிலான அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பை முதற்கட்டமாக 150 குடும்பங்களுக்கு தமிழக அரசு சார்பில் முதல்வரின் உத்தரவின்படி அமைச்சர் ஆவடி நாசர் வழங்கினார்.

### வணிகம் சாராத தனியார் வாகனங்களுக்கு

# ரூ.3 ஆயிரத்திற்கு பாஸ்டேக் வருடாந்திர பாஸ் அறிமுகம்

### ஆகஸ்ட் 15-ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது

புதுடெல்லி, ஜூன் 19-

**கார்கள், ஜீப்புகள் மற்றும் வேன்கள் போன்ற வணிகம் சாராத தனியார் வாகனங்களுக்காக ரூ.3 ஆயிரத்திற்கு பாஸ்டேக் வருடாந்திர பாஸ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த நடைமுறை ஆகஸ்ட் 15 முதல் நடைமுறைக்கு வருகிறது.**

நாட்டில் நெடுஞ்சாலைகளில் நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் அதனை விட பெரிய கனரக வாகனங்கள் செல்லும்போது, அவை சுங்க சாவடிகளை கடந்து செல்லும். அப்போது சுங்க கட்டணம் செலுத்த வேண்டும். இதனால் காத்திருப்பு நேரம் அதிகரித்தல், போக்குவரத்து நெருக்கடி மற்றும் சுங்க சாவடிகளில் வாக்குவாதங்கள் போன்றவற்றுக்கான சூழல் காணப்பட்டது.

இந்நிலையில், போக்குவரத்து நெரிசல், விரைவாக சுங்க சாவடியை கடந்து செல்ல முடியாத சூழல் போன்ற அசவுகரிய நிலையை தவிர்க்க, பாஸ்டேக் என்ற கட்டண அமைப்பை அரசு அறிமுகப்படுத்தியது. இதனால், வாகனங்கள் எளிதில் சுங்க சாவடியை கடந்து செல்ல முடியும்.

இந்த பாஸ்டேக், ரேடியோ அதிர்வெண் தொழில்நுட்பம் உதவியுடன் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. வாகனங்களில் இதற்கான ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு இருக்கும். வாகனங்கள் சுங்க சாவடியை கடந்து சென்றதும், அந்த பாஸ்டேக் உதவியுடன், வங்கி கணக்கில் இருந்தோ அல்லது பாஸ்டேக்குடன் இணைக்கப்பட்ட கட்டணம் செலுத்தும் வசதி வழியாகவோ அந்த வாகனத்திற்கான சுங்க கட்டணம், பிடித்து கொள்ளப்படும்.

இந்த நிலையில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறைக்கான அமைச்சர் நிதின் கட்காரி, தடையில்லா நெடுஞ்சாலை பயணத்திற்காக ரூ.3 ஆயிரம் விலையிலான ஆண்டு பாஸ் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என நேற்று அறிவித்து உள்ளார்.

இந்த பாஸ்டேக் அடிப்படையிலான பாஸ் ஆனது,

(கடைசி பக்கம் பார்க்க)

### பாகிஸ்தான் பிரச்சனையில்

# இந்தியாவிற்கு ஒருபோதும் மத்தியஸ்தம் தேவையில்லை

### அதிபர் ட்ரம்பிடம் பிரதமர் மோடி உறுதி

புது டெல்லி, ஜூன் 19-

**பாகிஸ்தானுடனான பிரச்சினைகளில் இந்தியா ஒருபோதும் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டதில்லை, ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது, தேவையில்லை என்ற செய்தியை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி உறுதியாகத் தெரிவித்தார் என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறினார்.**

கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புடன் தொலைபேசியில் உரையாடினார். அரை மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த உரையாடலின் போது, இந்தியாவின் 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து பிரதமர் மோடி அமெரிக்க அதிபரிடம் விளக்கினார்.

இந்த உரை யாடல் குறித்து பேசிய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, "சமீபத்திய இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்த விவகாரத்தில் எந்த நேரத்திலும், எந்த மட்டத்திலும், இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் அல்லது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அமெரிக்காவின் மத்தியஸ்தம் போன்ற பிரச்சினைகள் விவாதிக்கப்படவில்லை என்பதை பிரதமர் மோடி அதிபர் ட்ரம்ப்பிடம் தெளிவுபடுத்தினார்.

ராணுவ நடவடிக்கையை நிறுத்துவது குறித்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில், இரு படைகள் தரப்பிலும் நேரடியாக விவாதிக்கப்பட்டது, மேலும் அது பாகிஸ்தானின் வேண்டுகோளின் பேரில் இருந்தது. இந்தியா ஒருபோதும் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டதில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினார். இந்த விஷயத்தில் இந்தியாவில் முழுமையான அரசியல் ரீதியான ஒருமித்த கருத்து உள்ளது." என்று கூறினார். மேலும், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பிரதமர் மோடியின் கருத்துக்களை விரிவாகப் புரிந்துகொண்டதாகவும், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு ஆதரவை வெளிப்படுத்தியதாகவும் மிஸ்ரி தெரிவித்தார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பகைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு வழியாக வர்த்தகத்தை பயன்படுத்தியதாகவும், இந்தியா பாகிஸ்தான் மோதலை முடிவுக்குக் கொண்டுவர மத்தியஸ்தராக தான் உதவியதாகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பலமுறை கூறியதை தொடர்ந்து இந்த கருத்துக்கள் வந்துள்ளன.

தொடர்ந்து பேசிய விக்ரம் மிஸ்ரி, "ஜி7 உச்சிமாநாட்டின் போது பிரதமர் மோடிக்கும் அதிபர் ட்ரம்ப்புக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற திட்டமிடப்பட்டது.

ஆனால், அதிபர் ட்ரம்ப் அமெரிக்காவுக்கு முன்கூட்டியே திரும்ப வேண்டியிருந்தது, இதனால் இந்த சந்திப்பு நடக்கவில்லை. இதன் பிறகு, அதிபர் ட்ரம்பின் வேண்டுகோளின் பேரில், இரு தலைவர்களும் இன்று தொலைபேசியில் பேசினர். ஏப்ரல் 22

(கடைசி பக்கம் பார்க்க)

# வலுவடைந்தது காற்றழுத்த தாழ்வு: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

புதுடில்லி, ஜூன் 19-

**தென்மேற்கு வங்கதேசம், அதை ஒட்டிய மேற்கு வங்கத்தில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற்றது என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ள நிலையில் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை:

வடமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அப்பகுதியில் நேற்று முன்தினம் காலை, புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியது. தென்மேற்கு வங்கதேசம், மேற்கு வங்கம் ஒட்டி நிலவி வந்தது.

இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. தற்போது, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வங்கம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவி வருகிறது. தமிழகத்தில் ஒரு சில இடங்கள், புதுச்சேரி, காரைக்காலில் லேசானது முதல், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மார்க்கெட் விலை நிலவரம்

| BSE | NSE |
|---|---|
| -138.64 | -41.35 |
| பாயின்ட் 81,444.46 | பாயின்ட் 24,812.05 |



**தங்கம்**
1 சவரன் ₹73,600
1 கிராம் ₹9,200



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹86.47

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### 'சமரசத்துக்கு வாய்ப்பில்லை - போர் தொடங்கியது'

# அமெரிக்கா, இஸ்ரேலுக்கு, ஈரானின் உச்சத்தலைவர் கமேனி எச்சரிக்கை

**தெஹ்ரான், ஜூன் 19-**

ஈரான் - இஸ்ரேல் போர் உச்சத்தை தொட்டுள்ள நிலையில், "போர் தொடங்குகிறது. இனி ஸயோனிஸ்ட்டுகளுக்கு (யூதர்களின் தேசிய இயக்கத்துக்கு) இரக்கம் காட்ட முடியாது. அந்த பயங்கரவாத பிராந்தியத்துக்கு எதிராக நாம் பலத்துடன் இயங்க வேண்டும். சமரசத்துக்கு வாய்ப்பில்லை என்று ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி எச்சரித்துள்ளார். அமெரிக்கா, இஸ்ரேல் மிரட்டல்களைத் தொடர்ந்து கமேனி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே இதே மிரட்டலை ஆங்கிலம், ஃபார்ஸியில் வெளியிட்ட ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி, தற்போது அதனை ஹீப்ரு மொழியில் தெரிவித்துள்ளார். ஒரே நாளில் அடுத்தடுத்து சில மணி நேரங்களிலேயே மூன்று மொழிகளில் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளது கவனிக்கத்தக்கது.



**ஈரானின் உச்சத்தலைவர் அயதுல்லா அலி கமேனி**

மேலும், ஃபார்ஸி மொழியில் அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், கையில் வாளேந்திய நபர் கோட்டை வாயிலில் இருப்பதுபோன்ற சித்தரிப்புப் படத்தை இணைத்து, 'போர் தொடங்கியது' என்று குறிப்பிட்டுள்ளார். கோட்டையின் மேலே குண்டு மழை பொழிவதுபோலவும் காட்சி உள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்லாமியர்களுக்கும் - யூதர்களுக்கும் இடையேயான கைபர் போரை நினைவுகூர்வது போல் இந்த வரைபடம் அமைந்துள்ளதாக நெட்டிசன்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில், "ஈரானின் உச்சபட்ச தலைவர் என்று அழைக்கப்படுபவர் எங்கு மறைந்திருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியும். அவர் எங்களுக்கு ஒரு எளிதான இலக்கு. ஆனால் அங்கு பாதுகாப்பாக இருக்கிறார். நாங்கள் அவரை கொல்லப் போவதில்லை. குறைந்தபட்சம் இப்போதைக்கு இல்லை. ஆனால் பொதுமக்கள் அல்லது அமெரிக்க வீரர்கள் மீது ஏவுகணைகள் வீசப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் பொறுமை குறைந்து வருகிறது.

இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி. ஈரான் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# உயிர் வாழ மிகவும் தகுதியான நகரங்கள்: 'டாப் 10'-ல் ஆஸி.யை சேர்ந்த 3 நகரங்கள்

**புதுடில்லி, ஜூன் 19-**

2025ம் ஆண்டில், உலகில் உயிர் வாழ மிகவும் தகுதியான நகரங்கள் பட்டியல் வெளியாகி உள்ளது. இதில் முதல் இடத்தை டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகன் பிடித்துள்ளது. முதல் 10 நகரங்களில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த 3 நகரங்கள் இடம்பிடித்துள்ளன.

நடப்பு 2025ம் ஆண்டில் உலகில் உயிர் வாழ மிகவும் தகுதியான நகரங்கள் பட்டியலை எகனாமிஸ்ட் இதழின் இன்டலிஜென்ஸ் யூனிட் (EIU) வெளியிட்டுள்ளது. உலக அளவில் 173 நகரங்களில் ஆய்வு நடத்தி, தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடு செய்யப்பட்டு உள்ளது. உலகில் உயிர் வாழ

மிகவும் தகுதியான 'டாப் 10' நகரங்கள் பின்வருமாறு., கோபன்ஹேகன், டென்மார்க், வியன்னா, ஆஸ்திரியா, சூரிச், சுவிட்சர்லாந்து, மெல்போர்ன், ஆஸ்திரேலியா. ஜெனீவா, சுவிட்சர்லாந்து, சிட்னி, ஆஸ்திரேலியா, ஒசாகா, ஜப்பான், ஆக்லாந்து, நியூஸிலாந்து., அடிலெய்டு, ஆஸ்திரேலியா, வான்கூவர், கனடா,

இந்த பட்டியலில் கடைசி வரிசையில் இடம் பெற்றுள்ள நகரங்கள் வருமாறு., வங்கதேச தலைநகர் டாக்கா கடைசியில் இருந்து 3வது இடத்தையும், பாகிஸ்தானின் கராச்சி மற்றும் அல்ஜீரியாவின் அல்ஜியர்ஸ் ஆகியவை நான்காவது மற்றும் ஐந்தாவது இடத்தையும் பிடித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### தண்டவாளத்தில் இரும்பு துண்டை வைத்து

# ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில்லை கவிழ்க்க மர்ம நபர்கள் சதி..!

**சேலம், ஜூன் 19-**

தண்டவாளத்தில் இரும்பு துண்டை வைத்து ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில்லை கவிழ்க்க மர்ம நபர்கள் சதி செய்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோட்டில் இருந்து சேலம், ஜோலார்பேட்டை வழியாக சென்னைக்கு தினசரி ரயில்லாக ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வழக்கம் போல ஈரோட்டில் இருந்து புறப்பட்டு சேலம் மாவட்டம் சங்ககிரியை அடுத்த மாவேலிபாளையத்தை கடந்து மகுடஞ்சாவடி அருகே வந்து கொண்டிருந்தது.

அப்போது ரயில் என்ஜின் சக்கரத்தில் இரும்பு துண்டு சிக்கிய நிலையில் தரதரவென சிறிது தூரம் இழுத்து சென்றது. ஏதோ விபரீதம் நடப்பதை அறிந்த ரயில் என்ஜின் டிரைவர் உடனடியாக ரயில்லை நிறுத்தினார். பின்னர் கீழே இறங்கி சென்று பார்த்தபோது தண்டவாளத்தில் பெரிய அளவிலான இரும்பு துண்டு வைக்கப்பட்டிருந்ததும் அது ரயில் என்ஜினின் சக்கரத்தில் சிக்கி



இருப்பதும் தெரிய வந்தது.

இதனால் ரயில் என்ஜின் பழுதானதால் தொடர்ந்து இயக்க முடியாத நிலையில் ரயில் இருப்பதை அறிந்த என்ஜின் டிரைவர் இது குறித்து ரயில்வே கோட்ட கட்டுப்பாட்டறைக்கு தகவல் தெரிவித்தார். உடனே அங்கு விரைந்து வந்த ரயில்வே அதிகாரிகள் மற்றும் சேலம், ஈரோடு ரயில்வே போலீசார் சம்பவம் குறித்து விசாரணை நடத்தினர்.

அப்போது ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில்லை கவிழ்க்கும் நோக்கில் பெரிய அளவிலான 10 அடி நீளமுள்ள உடைந்த தண்டவாள துண்டை ரயில் தண்டவாளத்தின் குறுக்கே மர்ம நபர்கள் வைத்து சென்றது தெரிய வந்தது. தொடர்ந்து மோப்பநாயும் வரவழைத்து ஆய்வு செய்தனர். சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஓடிய நாய் மீண்டும் அதே இடத்திற்கு வந்தது.

இதற்கிடையே ரயில் நடுவழியில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் ரயில்லில் இருந்து இறங்கி தவித்தபடி நின்றனர். தொடர்ந்து சேலத்தில் இருந்து மாற்று என்ஜின் கொண்டு வரப்பட்டு அந்த என்ஜின் பொருத்தப்பட்டது. பின்னர் 2 மணி நேரம் தாமதமாக இரவு 11.45 மணிக்கு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. இந்த சம்பவத்தால் திருவனந்தபுரத்தில் இருந்து டெல்லி சென்ற எக்பிஸ்பிரஸ் ரயில் 1 மணி நேரம் தாமதமாக புறப்பட்டு சென்றது.

இந்த சம்பவம் குறித்து ரயில்வே டி.எஸ்.பி.பாபு மற்றும் போலீசார் நடத்திய விசாரணையில், இரவு நேரத்தில் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் தண்டவாளத்தில் அமர்ந்து மது அருந்தி இருக்கலாம் என்றும், மது போதையில் அங்குகிடந்த 10 அடி நீளமுள்ள உடைந்த தண்டவாள துண்டை ரயில் தண்டவாளத்தின் குறுக்கே வைத்து சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து அந்த பகுதி காட்டுப்பகுதி என்பதால் அங்கு கேமராக்கள் இல்லை. ஆனாலும் அருகில் உள்ள காளிகவுண்டம்பாளையம், மாவேலிக்கரை, மகுடஞ்சாவடி பகுதியில் தண்டவாள பகுதியில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் சுற்றி திரிந்த நபர்கள் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் தொடர்ந்து பரபரப்பு நிலவி வருகிறது.

# மீண்டும் ரூ.74 ஆயிரத்தை தொட்டது தங்கம் விலை..!

**சென்னை, ஜூன் 19-**

சென்னையில் நேற்று (புதன்கிழமை) 22 கேரட் ஆபரணத் தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு பவுன் ரூ.74,000-க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அடிப்படையில் இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு உலக நாடுகளின் வர்த்தக ரீதியான செயல்பாடும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூன் 18) கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,250-க்கும் பவுனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு பவுன் ரூ.74,000-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.122-க்கும், ஒரு கிலோ பார் வெள்ளி ரூ.1,22,000-க்கும் விற்பனையானது.

# வாட்ஸ்அப் செயலியை நீக்குங்கள்: குடிமக்களுக்கு ஈரான் அரசு உத்தரவு

**தெஹ்ரான், ஜூன் 19-**

வாட்ஸ்அப் செயலியை நீக்க வேண்டும் என்று ஈரான் மக்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

சமீப நாட்களில் சில உயர்மட்ட தலைவர்கள் படுகொலை மற்றும் மிகவும் துல்லிய தாக்குதல்களை எதிர்கொண்டுள்ள ஈரான், செல்போனிலிருந்து வாட்ஸ்அப் செயலியை நீக்கச் சொல்லி தனது குடிமக்களுக்கு உத்தரவிட்டுள்ளது. சமீபத்திய நாட்களில் ஈரானில் பல உயர்மட்ட தலைவர்கள் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்டனர். அதுபோல பல முக்கிய ராணுவ, அணுசக்தி மையங்களும் இஸ்ரேலால் துல்லியமாக தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதல்களின் துல்லியம் ஈரானிய அரசாங்கத்தை மட்டுமல்ல, உலக நாடுகளையே திகைக்க வைத்துள்ளது.

இதனையடுத்து, வாட்ஸ்அப் உட்பட சில செயலிகள் மற்றும் தொலைபேசிகளால் இருப்பிடத் தரவுகள் கசிந்ததன் அடிப்படையில் முக்கிய தலைவர்கள் குறிவைக்கப்பட்டிருக்கலாம் என்று ஈரான் தெரிவித்துள்ளது. எனவே, வாட்ஸ்அப்பை தங்கள் தொலைபேசிகளிலிருந்து அகற்றுமாறு தனது குடிமக்களுக்கு ஈரான் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று முன்தினம் ஈரானிய அரசு தொலைக்காட்சி மக்களை தங்கள் தொலைபேசிகளிலிருந்து வாட்ஸ்அப்பை நீக்குமாறு அழைப்பு விடுத்தது. இந்த செயலி இஸ்ரேலிய ராணுவத்திற்கு பயனர் தகவல்களை கசியவிடக்கூடும் என்று அந்த அறிவிப்பு கூறியது. இது ஈரானில் டிஜிட்டல் தனியுரிமை மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து வளர்ந்து வரும் அச்சங்களை அதிகரித்துள்ளது. குற்றச்சாட்டு குறித்து கருத்து தெரிவித்த வாட்ஸ்அப் நிறுவனமான மெட்டா, "இந்த தவறான அறிக்கைகள் மக்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் எங்கள் சேவைகள் தடுக்கப்படுவதற்கு ஒரு சாக்காக இருக்கும் என்று நாங்கள் கவலைப்படுகிறோம்.

உங்கள் துல்லியமான இருப்பிடத்தை நாங்கள் கண்காணிக்கவில்லை. யாருக்கு யார் செய்தி அனுப்புகிறார்கள் என்பதற்கான பதிவுகளை நாங்கள் வைத்திருக்கவில்லை. மேலும் மக்கள் ஒருவருக்கொருவர் அனுப்பும் தனிப்பட்ட செய்திகளை நாங்கள் கண்காணிக்கவில்லை. நாங்கள் எந்த அரசாங்கத்திற்கும் மொத்தத் தகவல்களையும் வழங்குவதில்லை." என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு: மீண்டும் டெல்லிக்கு திரும்பிய விமானம்

**டெல்லி, ஜூன் 19-**

எரிமலை வெடிப்பால் இந்தோனேசியாவில் புறப்பட்ட விமானம் டெல்லியில் நேற்று தரையிறக்கப்பட்டதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

தலைநகர் டெல்லியில் இருந்து நேற்று இந்தோனேசியாவின் பாலி தீவிற்கு ஏர் இந்தியா விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில் 100-க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்தனர். இந்நிலையில், பாலி தீவில் உள்ள எரிமலை வெடித்து சிதறியது. இதனால், பாலி விமான நிலையம் அருகே கடும்புகை சூழ்ந்து காணப்படுகிறது. இதனால், விமானம் தரையிறங்க முடியாத சூழ்நிலை நிலவுகிறது. இது குறித்து விமானிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பின்னர், விமானம் மீண்டும் டெல்லியில் பத்திரமாக தரையிறங்கியது. பயணம் தடைபட்ட நிலையில் பயணிகளின் டிக்கெட் தொகை திருப்பி வழங்கப்படும் என்று ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.

**19-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** கோபம் தவிர்த்து சிந்தித்து செயல்பட்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் காணலாம். மிகுந்த புத்திசாலிகள், ஆயினும் புத்தி மழுங்கியவர் போல் செயல்படுவர். பெண்களால் பணவிரயம் ஏற்படும்.

**ரிஷபம்:-** தன லாபத்துடன் எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். பிரிந்தவர்கள் ஒன்றுகூடி மகிழ்வர். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும்.

**மிதுனம்:-** எல்லாக் காரியங்களும் எதிர்பார்த்ததைவிட அனுகூலமாய் நடக்கும். தன்னம்பிக்கை, தைரியம், எல்லாம் ஓங்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

**கடகம்:-** மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள். பேச்சு வன்மையால் பெரும் சாதனைகள் புரிவார்கள். அரசு மற்றும் அரசியல் வாதிகள் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும்.

**சிம்மம்:-** ஒதுக்கி வைத்த உறவுகள், தங்கள் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்வர். முகஸ்துதிக்காக பாராட்டவும் செய்வார். மனைவியின் கலகத்தால் பாசமான பந்துக்கள் கூடப் பகைவர் ஆவர்.

**கன்னி:-** பலவழிகளிலும் தனவரவு கூடும். வீட்டிற்குத் தேவையான நவீன பொருட்களை வாங்கிக் குவிப்பீர்கள். புதிய காதல் ஏற்பட்டு அதனால் மகிழ்ச்சி ஏற்படும். புத்தாடை, ஆபரண வகைகள் சேரும்.

**துலாம்:-** ஆரோக்கியம் பெருகும். பயண சுகம் கூடும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். வியாபாரிகளுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** சிரத்தையற்ற செயலால் திறமை இருந்தும் நல்ல பெயர் கிடைக்காது. சொல்பேச்சு கேட்காத பிள்ளைகளால் நிம்மதி குறையும். வியாபாரப் போட்டி காரணமாக போராடி வெற்றி பெறும் நிலை ஏற்படும்.

**தனுசு:-** தொழில் முதலீடுகளை கூடிய மட்டும் குறைப்பது நல்லது. வீட்டிலிருந்து வாகனத்தை நகர்த்துவதற்கு முன் அனைத்து பாகங்களையும் பரிசோதித்து எடுக்கவும். மனநிம்மதிக்கு கடவுளை வேண்டவும்.

**மகரம்:-** வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் குவிப்பீர்கள். புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும். நேரத்தை வீணாக்காமல் தன்னம்பிக்கையுடன் படித்தால் தேரலாம்.

**கும்பம்:-** குடும்பத்தில் நிம்மதி அற்ற நிலை ஏற்படும். தொழிலில் இழப்பு ஏற்படும் என்று தெரிந்தும் அதிக முதலீடுகள் செய்யாதிருப்பது நல்லது. தீய வழிகளில் தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டியது வரும்.

**மீனம்:-** பெரிய மனிதர்களின் நட்பால் பெருமையடைவீர்கள். பணவரவு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.





**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நாணயவியல் ஆராய்ச்சியாளர் ஆறுமுக சீதாராமன் ஆகியோர் இணைந்து எழுதிய 'வரலாறு கூறும் தமிழ்நாட்டுக் காசுகள்' எனும் 2 பாகங்கள் கொண்ட புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பாலகிருஷ்ணன் (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.**

# கீழடி ஆய்வறிக்கையை ஏற்க மறுப்பு: மத்திய அரசுக்கு த.வெ.க. கண்டனம்

**சென்னை, ஜூன் 19-**

சென்னை வட்டாரத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்ட அமர்நாத். கீழடி அகழாய்வின் முதல் இரண்டு கட்ட அகழாய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கீழடி ஆய்வறிக்கையை ஏற்க மறுக்கும் மத்திய அரசுக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்புப் பொதுச் செயலாளர் அருண்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

2014-ம் ஆண்டில் சிவகங்கை மாவட்டம் கீழடியில் இந்தியத் தொல்லியல் துறை அகழாய்வு மேற்கொள்ளத் தொடங்கியது. 2014-இல் கீழடியில் அகழாய்வு செய்த திரு.அமர்நாத் ராமகிருஷ்ணா தலைமையிலான குழுவினார். அகழாய்வில் கிடைக்கப் பெற்ற பொருட்களைக் கொண்டு, அங்கு நகர நாகரிகம் இருந்ததற்கான முடிவுக்கு வந்தனர்.

இந்த அகழாய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில், அமர்நாத் திடீர் என அசாம் மாநிலத்திற்கு மாற்றப்பட்டார். அதன் பிறகு, மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகளை மேற்கொள்ள ஸ்ரீராமன் என்பவரை இந்தியத் தொல்லியல் துறை நியமனம் செய்தது. மூன்றாம் கட்ட அகழாய்வு நிறைவுறும் தறுவாயில், கீழடியில் மேற்கொண்டு அகழாய்வு செய்வதற்கு ஒன்றுமில்லை எனவும், கிடைத்த பொருட்களே மீண்டும் கிடைப்பதாகக் கூறி ஆய்வினைத் ஸ்ரீராமன் நிறைவு செய்தார்.

அதன் பிறகு, கீழடியில் நான்காம் கட்ட அகழாய்வுப் பணி தமிழக அரசின் சார்பில் தொடங்கப்பட்டது. தற்போது 10ஆம் கட்ட அகழாய்வுப் பணி, தமிழகத் தொல்லியல் துறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், கீழடி அகழாய்வின் முதல் இரண்டு கட்ட அகழாய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், தொல்லியல் ஆய்வுலகில் இந்த ஆய்வறிக்கை குறித்து அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது. அசாமைத் தொடர்ந்து கோவா, பிறகு, மறுபடியும் சென்னை வட்டாரத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்ட அமர்நாத். கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கீழடி முதல் இரண்டு கட்ட அகழாய்வு அறிக்கையை இந்தியத் தொல்லியல் துறையிடம் (ஏஎஸ்ஐ) சமர்ப்பித்தார்.

இதில் கீழடியில் நிலவிய கலாசாரம். அங்கு விவசாயம் செய்யப்பட்ட பயிர்கள், விலங்குகள். நகர நாகரிகத்தை நோக்கி நகர்ந்த தன்மை உள்ளிட்டவை குறித்தும், 5.765 தொல்லியல் பொருட்கள் பற்றியும் 982 பக்கம் கொண்ட அறிக்கையில் அவர் தெளிவாக விளக்கியுள்ளார். அது மட்டுமன்றி கீழடி நாகரிகம் சுமார் 2600 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதையும் தெளிவுபடுத்தி உள்ளார். அதன் பின்னர், 2 ஆண்டுகள் ஆகியும் கீழடி அறிக்கையை வெளியிடாமல் மத்திய அரசு காலம் தாழ்த்தியது. இயக்குநர் நாயக், இரண்டு நிபுணர்கள் அளித்த பரிந்துரைகளை மேற்கோள் காட்டி, தேவையான திருத்தங்களைச் சேர்த்து, கீழடி அறிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு அமர்நாத் ராமகிருஷ்ணாவிடம் கேட்டுக்கொண்டார். அறிக்கையில் வழங்கப்பட்ட இறுதி முடிவுகள், விரிவான தொல்லியல் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும், விரிவான அறிவியல் சோதனை முடிவு ஆவணங்களால் ஆதரிக்கப்படுகின்றன என்றும் திரு. அமர்நாத் ராமகிருஷ்ணா தனது பதிலில் விளக்கினார்.

இந்தச் சூழலில், கீழடி அகழாய்வு மேற்கொண்ட அமர்நாத் ராமகிருஷ்ணாவை நொய்டாவுக்குப் பணியிட மாற்றம் செய்து மத்தியத் தொல்லியல் துறை (ஜூன் 17) உத்தரவிட்டுள்ளது.

கீழடியின் பெருமையை மறைக்க உள்ளடி வேலை செய்யும் மத்திய பா.ஜ.க.வுடன். வெளியே மட்டும் எதிர்ப்பு வேடம் போட்டுக் கொண்டு. குடும்ப நிதியைக் காப்பதற்காக ஒரே போர்வைக்குள் ஒளிந்துகொண்டு, மறைமுகமாக ஒத்து ஊதும் தி.மு.க.விற்கும் சேர்த்துச் சொல்லிக்கொள்கிறோம். தமிழ், தமிழர் நாகரிகவானத்தை எந்தப் புழுதிப் போர்வையையும் போர்த்தி அழுக்காக்கிவிட இயலாது.

அத்தகைய முயற்சி செய்வோருடன் எவ்விதத்திலும் மறைமுகமாகவோ நேரடியாகவோ துணைபோகும் சக்திகளும் மக்கள் மத்தியில் அம்பலமாவது நிச்சயம் என்பதை எங்கள் வெற்றித் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க., உடன் பா.ம.க., இணைந்தால்

# கூட்டணியில் இருந்து வி.சி.க. வெளியேறும்: திருமாவளவன்

**சென்னை, ஜூன் 19-**

தி.மு.க., உடன் பா.ம.க., இணைந்தால் கூட்டணியில் இருந்து வெளியேறுவோம். நான் இடையூறாக இருக்க மாட்டேன் என விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் செய்தி சேனலுக்கு அளித்த பேட்டி: பா.ம.க., உடன் உறவை முறித்து கொண்டது, நாங்கள் ஆழமாக சிந்தித்து எடுத்த முடிவு. நாங்கள் வன்னியர் சமூகத்திற்கு எதிரானவர்கள் அல்ல. பா.ம.க., வன்னியர்களையும், தங்களுக்கு சாதகமாக, கட்சியின் நலனுக்காக பயன்படுத்தி கொள்கிறார்கள். தலித்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை அவர்கள் கையில் எடுத்தார்கள்.

முதலில் இட ஒதுக்கீடு போராட்டத்தின் போது, தலித் மக்கள் பாதிக்கப்பட்டார்கள், குடிசைகளை கொளுத்தினார்கள். எத்தனையோ பிரச்னைகள் நடந்தது. அது எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. நாம் எல்லாம் ஒற்றுமையாக இருப்போம் என ஒரு தாய் மக்கள் மாநாடு நடத்தினார். ஒரு தாய் மக்கள் மாநாடு நடத்திய, தலித் அல்லாத முதல் தலைவர் ராமதாஸ். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, தலித் சமூகத்தை சேர்ந்தவர்களை பொதுச்செயலாளர் ஆக்கினார்.

அம்பேத்கருக்கு சிலைகளை நிறுவினார். தலித் சமூகத்தை சேர்ந்தவர் தான் பா.ம.க.,வின் நிரந்தர பொதுச் செயலாளர் ஆக இருப்பார். முதல் முறையாக, இரண்டு தலித் சமூகத்தை சேர்ந்தவரை அமைச்சர் ஆக்கினார். இது எல்லாம் அந்த காலத்தில் சரி. இரண்டு சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக அளப்பறிய முயற்சி. வரலாற்றில் என்றைக்கும் பொன் எழுத்துகளால் பொறிக்க வேண்டிய ஒன்று.

அதற்கு முன்னாள் நடந்த வன்முறையை விடுங்கள். அந்த வன்முறையால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்ய வேண்டிய ஒரு செயல்திட்டமாக இது எல்லாம் இருந்தது. அதன் பிறகு அதனை தொடர்ந்து செய்ய வேண்டுமா, இல்லையா? சமூக நல்லிணக்கத்தை பேண வேண்டுமா, இல்லையா? நான் எப்படி உங்களுக்கு எதிரியாக இருக்க முடியும்? நான் எந்த இடத்தில் உங்களுக்கு எதிராக பேசி இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

தி.மு.க., கூட்டணியில் இடம் பெற்றால், திருமாவளவன் என்ன நினைத்து கொள்வார் என ராமதாசுக்கு சங்கடம் இருப்பதாக பேசப்படுகிறது என கேள்வி எழுப்பட்டது. இதற்கு திருமாவளவன் அளித்த பதில்: நான் யாருக்கும் இடையூறாக இருக்க மாட்டேன். நான் யாருக்கும் நெருக்கடி தர மாட்டேன். நிர்பந்தம் தரமாட்டேன். அது அவர்கள் எடுக்கிற முடிவுகள். தி.மு.க.,வுக்கும், பா.ம.க.,வுக்கும் இடையே அப்படி ஒரு நல்லிணக்கம் இருந்து, அப்படி ஒரு முடிவு எடுத்தால் நான் தலையிட மாட்டேன். நாங்கள் வெளியேறுவோம். நாங்கள் தனியாக நிற்போம் என்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மூர்த்தி, தலைமை செயலாளர் முருகானந்தம், கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா, தலைமைச் செயலர் காகர்ஸா உஷா, நிதித்துறை முதன்மை செயலாளர் உதயசந்திரன், ஆணையாளர் ஜகந்நாதவி, பதிவுதிதலைவர் திணேஷ் ஆலிவர் பொன்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


### கிருஷ்ணகிரியில் ‘மா’ விவசாயிகளுக்கு ஆதரவாக

# அ.தி.மு.க. சார்பில் நாளை உண்ணாவிரத போராட்டம்

### எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஜூன் 19-**

‘மா’ சாகுபடி விவசாயிகளின் துயரங்களைப் போக்கு வதற்கு முன்வராத திமுக ஆட்சியாளர்களைக் கண்டித்து, ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்டக் கழகங்களின் சார்பில், வரும் வெள்ளிக்கிழமை (நாளை) முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி, தலைமையில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் நெல், கரும்பு சாகுபடிகளைத் தொடர்ந்து, அதிக நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுவது ‘மா’ மற்றும் ‘தென்னை ஆகும். சுமார் 1 லட்சத்து 14 ஆயிரம் ஹெக்டேரில் ‘மா’ சாகுபடி செய்யப்படுகிறது. இதில் குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 35 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 3 லட்சம் மெட்ரிக் டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது.

அதில் 2 லட்சம் மெட்ரிக் டன் மாம்பழத்தில், மாம்பழக் கூழ் தயாரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு மாங்காய் மற்றும் மாம்பழத்தின் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டதாலும், மாம்பழக் கூழ் தயாரிக்க மாம்பழங்களை கொள்முதல் செய்வதில் பெரும் பின்னடைவு இருப்பதாலும், கிருஷ்ணகிரி மாவட்ட ‘மா’ விவசாயிகள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகி உள்ளார்கள்.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை சரிகட்ட வேண்டுமென்று அரசுக்கு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மனு அளித்தும், இதுவரை முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

மாங்கூழ் தொழிற்சாலைகள் கிலோ ஒன்றுக்கு 4 முதல் 5 ரூபாய் மட்டுமே தர முன்வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். ‘மா’ விவசாயிகள் கொள்முதல் விலையாக மாம்பழம் கிலோ ஒன்றுக்கு 13 ரூபாய் வழங்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 30,000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி.யை 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைப் போக்கவும், மேலும் அவர்கள் தெரிவித்துள்ள மற்ற கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கும் முத்தரப்பு பேச்சுவார்த்தை என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் நாடகமாடப்படுகிறதே தவிர, இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் ‘மா’ பயிரிட்டுள்ள விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாகத் தீர்த்துவைக்க அரசை வலியுறுத்தி, அனைத்திந்திய அ.தி.மு.க. ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தின் சார்பில், 20.6.2025 - வெள்ளிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம், கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி, தலைமையிலும்; கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பாலகிருஷ்ணா ரெட்டி: கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அசோக்குமார், ஊத்தங்கரை தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் தமிழ்செல்வம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஏ.டி.ஜி.பி., ஜெயராம் சஸ்பெண்ட் உத்தரவை

# திரும்பப்பெறுவது குறித்து அரசு பதிலளிக்க வேண்டும்

### மேல்முறையீட்டு வழக்கில் சுப்ரீம் கோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, ஜூன் 19-**

கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஏ.டி.ஜி.பி. ஜெயராம் போலீஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார் என்று தெரிவித்துள்ள சுப்ரீம் கோர்ட் ஏ.டி.ஜி.பி., ஜெயராம் சஸ்பெண்ட் உத்தரவை திரும்பப்பெறுவது குறித்து அரசு பதிலளிக்க வேண்டும் என்று மேல்முறையீட்டு வழக்கில் தமிழக அரசுக்கு உத்தரவிட்டு வழக்கை இன்றைக்கு தள்ளி வைத்துள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் களாம்பாக்கத்தை சேர்ந்த தனுஷ் என்ற வாலிபர் இன்ஸ்டாகிராமில் பழகி தேனியைச் சேர்ந்த விஜயஸ்ரீ என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த திருமணத்துக்கு பெண்ணின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தனுசின் சகோதரரான 17 வயது சிறுவன் கடத்தப்பட்டார். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர்.

இதற்கிடையே இந்த வழக்கில் முன்ஜாமீன் கேட்டு ஜெகன்மூர்த்தி எம்.எல்.ஏ. தாக்கல் செய்த மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, காதல் விவகாரத்தில் சிறுவனை கடத்திய வழக்கில் உடந்தையாக செயல்பட்டதாக கூடுதல் டி.ஜி.பி.ஜெயராமை கைது செய்ய நேற்று முன்தினம் உத்தரவிட்டது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

இதற்கிடையே ஐகோர்ட் உத்தரவை எதிர்த்து ஜெயராம் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த மனு நேற்று நீதிபதிகள் உஜ்ஜல் புயன், மன்மோகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் மூத்த காவல் அதிகாரியான ஏ.டி.ஜி.பி. ஜெயராம் போலீஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். அப்படி இருக்க எதற்காக அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்?. அவரது பணியிடை நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். இதற்கு தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், “ஏ.டி.ஜி.பி. ஜெயராம் பணியிடை நீக்கத்தை ரத்து செய்வது தொடர்பாக உரிய விளக்கத்தை கேட்டு தெரிவிக்கிறோம் என்று தெரிவித்தார்.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் சஸ்பெண்ட் உத்தரவை திரும்பப் பெறுவது குறித்து தமிழ்நாடு அரசின் ஆலோசனையை பெற்று இன்று பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை இன்றைக்கு தள்ளி வைத்தனர். இதனால் ஏ.டி.ஜி.பி.யின் சஸ்பெண்ட் ரத்தாகுமா? என்ற எதிர்ப்பார்ப்பு எழுந்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அமர்நாத் யாத்திரை பகுதிகளில் பலூன்கள், டிரோன்கள் பறக்க தடை

**ஸ்ரீநகர், ஜூன் 19-**

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் அனைத்து வழிகளும் பறப்பதற்கு தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 10 வரை அமர்நாத் யாத்திரை பகுதிகளில் பலூன்கள், டிரோன்கள் உள்ளிட்ட எந்தவகையான சாதனங்களும் பறப்பதற்கு தடைவிதிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியுள்ளதாவது: இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை ஜூலை 3-ல் தொடங்கி ஆகஸ்ட் 8 உடன் நிறைவடைய உள்ளது. இதையடுத்து யாத்திரைக்கான பாதுகாப்பை பலப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக, அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் அனைத்து வழிகளும் பறப்பதற்கு தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் பஹல்காம் மற்றும் பால்தால் வழியான பாதைகளும் அடங்கும். இந்த உத்தரவை தொடர்ந்து ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 10 வரை அமர்நாத் யாத்திரை பகுதிகளில் பலூன்கள், டிரோன்கள் உள்ளிட்ட எந்தவகையான சாதனங்களும் பறப்பதற்கு தடைவிதிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகான பாதுகாப்பு சூழலை கருத்தில் கொண்டே ஜம்மு காஷ்மீர் அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

### பெண் நக்சல் உள்பட

# 3 பேர் ஆந்திராவில் சுட்டுக்கொலை

**அமராவதி, ஜூன் 19-**

ஆந்திராவில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கச் சூட்டில் நக்சல் அமைப்பின் தலைவன் சலபதியின் மனைவி அருணா உட்பட நக்சலைட்டுகள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆந்திரா மாநிலம், அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக உளவுதுறைக்கு தகவல் வந்தது. அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் பாதுகாப்பு படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.


இதையடுத்து, பதிலுக்கு பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நக்சல் அமைப்பின் தலைவன் சலபதியின் மனைவி அருணா உட்பட நக்சலைட்டுகள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து வெடிமருந்துகள் மற்றும் மூன்று AK-47 துப்பாக்கிகளை பாதுகாப்பு படையினர் மீட்டனர். அப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருக்கிறார்களா என்பது குறித்து தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

நக்சல் அமைப்பு தலைவன் சலபதி, கடந்த ஜனவரியில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சுட்டுக் கொல்லப்பட்டான். இவனது மனைவி அருணாவும் நக்சல் அமைப்பின் முக்கிய பொறுப்பில் இருந்தார். அவர், நேற்று பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். இது நக்சல் அமைப்புக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

# வருமான வரித்துறை சோதனை குறித்து நடிகர் ஆர்யா விளக்கம்

**சென்னை, ஜூன் 19-**

சென்னையில் நடிகர் ஆர்யாவின் வீட்டில் நேற்று வருமான வரித்துறை சோதனை நடந்தது. மேலும் அவருக்கு சொந்தமானது என சொல்லப்படும் உணவகங்களிலும் சோதனை நடந்ததாக தகவல் வெளியாகின. இந்நிலையில், வருமான வரித்துறை சோதனை நடக்கும் உணவகத்துக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என ஆர்யா விளக்கமளித்துள்ளார்.



நடிகர் ஆர்யா தனது உறவினர்கள் மூலம் சென்னையில் ‘ஷீ ஷெல்’ எனும் பெயரில் உணவகங்கள் நடத்துவதாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில், அண்ணா நகர், கீழ்ப்பாக்கம், கொட்டிவாக்கம், வேளச்சேரி உள்ளிட்ட இடங்களில் உள்ள ‘ஷீ ஷெல்’ உணவகங்களில் நேற்று வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். மேலும், ஆழ்வார்பேட்டையில் உள்ள நடிகர் ஆர்யாவின் வீட்டிலும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

வருமான வரித்துறை சோதனை நடக்கும் உணவகத்துக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை எனவும், அந்த உணவகத்தின் உரிமையாளர் வேறு ஒருவர் என்றும் நடிகர் ஆர்யா விளக்கமளித்துள்ளார். கேரளாவைச் சேர்ந்த குன்ஹி மூசா என்பவரே இந்த ‘ஷீ ஷெல்’ உணவகத்தின் உரிமையாளர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தரமணியிலுள்ள குன்ஹி மூசாவின் இல்லத்திலும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர்.

### அரசுக்கு அளிக்கும் மனுக்களுக்கு

# 30 நாட்களில் பதில் அளிக்காவிட்டால் அபராதம்: உயர் நீதிமன்றம் எச்சரிக்கை

**சென்னை, ஜூன் 19-**

அரசுக்கு அளித்த மனுக்களுக்கு 30 நாட்களில் பதில் அளிக்காவிட்டால் அபராதம் விதிக்க நேரிடும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் வழக்குகள் விசாரணையை துவங்கும் முன் வழக்கறிஞர் ஒருவர் முறையீடு ஒன்றை முன் வைத்தார். அதில் அரசுக்கு அளித்த விண்ணப்பத்தை பரிசீலிக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள பொதுநல வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

அப்போது தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம், அரசுக்கு அளிக்கும் விண்ணப்பங்கள் மீது 30 நாட்களுக்குள் முடிவெடுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பதிலளிக்குமாறு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசாணையின் படி 30 நாட்களுக்குள் விண்ணப்பங்களை பரிசீலிக்காததால் ஏராளமான பொதுநல வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன என சுட்டிக்காட்டினார்.

நாளை (இன்று) பொதுநல வழக்குகள் விசாரணைக்கு வரும் போது 30 நாட்களில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவில்லை என்றால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்க நேரிடும் என எச்சரித்தார். இந்த விவகாரத்தை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் உறுதி அளித்தார்.

### நாசா-இஸ்ரோ இணைந்து உருவாக்கிய

# நிசார் செயற்கைக்கோளை ஜூலை 14-ல் ஏவ திட்டம்

**பெங்களூர், ஜூன் 19-**

நாசா- இஸ்ரோ இணைந்து உருவாக்கிய நிசார் செயற்கைக்கோளை அடுத்த மாதம் 14-ம் தேதி ஏவ திட்டமிடப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.



பூமியை கண்காணித்து தகவல்களை சேகரிப்பதற்காக ‘நாசா-இஸ்ரோ செயற்கை துளை ரேடார்’ (நிசார்) என்ற செயற்கைக் கோளை அமெரிக்காவின் நாசா மற்றும் இஸ்ரோ இணைந்து உருவாக்கி உள்ளது. இந்த செயற்கைக்கோள் நாசா மற்றும் இஸ்ரோவின் கூட்டு முயற்சியாகும். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா கடந்த 2015-ம் ஆண்டு இந்தியா வந்தபோது இந்தியாவும், அமெரிக்காவும் இத்திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தம் மேற்கொண்டன.

இந்த செயற்கைக்கோள் அமெரிக்காவில் கலிபோர்னியாவில் வடிவமைக்கப்பட்டு, பல்வேறு சோதனைகளுக்கு பின்னர் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டது. விண்ணில் ஏவும்போது எதிர்பார்த்ததைவிட அதிக வெப்பம் அடைவதற்கான அபாயத்தை குறைக்க பிரதிபலிப்பு பூச்சு பயன்படுத்த கலிபோர்னியாவில் உள்ள உற்பத்தியாளரிடம் செயற்கைக்கோள் திருப்பி அனுப்பப்பட்டது. அங்கு மீண்டும் சரி செய்யப்பட்டு இந்தியா அனுப்பப்பட்டது.

பல்வேறு கட்ட சோதனைகளுக்காக நிசார் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படும் தேதி தள்ளிக் கொண்டே போனது. பின்னர், கடந்த மாதம் பெங்களூருவில் இருந்து ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திற்கு நிசார் செயற்கைக்கோள் முழு சோதனையை முடித்து கொண்டுவரப்பட்டு உள்ளது.

இது ஜி.எஸ்.எல்.வி. மார்க்-2 ராக்கெட்டில் பொருத்தப்பட்டு அடுத்த மாதம் 14-ம் தேதி விண்ணில் ஏவ இஸ்ரோ மற்றும் நாசா விஞ்ஞானிகள் திட்டமிட்டு உள்ளனர். இந்த செயற்கைக் கோள் பூமியில் இருந்து 747 கிலோ மீட்டர் சூரிய ஒத்திசைவான சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது. 2 ஆயிரத்து 800 கிலோ எடை கொண்ட நிசார் செயற்கைக் கோள் 3 ஆண்டுகள் ஆயுட்காலத்தை கொண்டுள்ளது. அத்துடன், 6 ஆயிரத்து 500 வாட்ஸ் சக்தி திறன் உள்ளது. இந்த செயற்கைக்கோள் தயாரிக்க சுமார் ரூ.1,805 கோடி செலவிட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள் பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை துல்லியமாக கண்காணிக்க உதவுகிறது. குறிப்பாக, பனிப்பாறைகள், காடுகள் மற்றும் விவசாய நிலங்கள் போன்றவற்றை ஆய்வு செய்யும். அத்துடன், நிலநடுக்கம், நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு போன்ற பேரிடர்களை கண்காணிக்கவும், அவற்றின் தாக்கத்தைக் குறைக்கவும் உதவும். அத்துடன் காடுகள் மற்றும் சதுப்பு நிலங்கள் போன்ற இயற்கை வளங்களை நிலையாக நிர்வகிக்க உதவி செய்கிறது. தொலைதூர உணர்தலுக்காகவும், பூமியில் இயற்கை செயல்முறைகளை கண்காணிக்கவும் இந்த செயற்கைக்கோள் உதவும் என்று இஸ்ரோ மற்றும் நாசா விஞ்ஞானிகள் கூறினர்.

### சேலத்தில் அன்புமணி தலைமையில் இன்று கட்சிக் கூட்டம்:

# ஜி.கே.மணி, அருள் எம்.எல்.ஏ. மருத்துவமனையில் அனுமதி

### பா.ம.க.வினர் மத்தியில் திடீர் பரபரப்பு

**சென்னை, ஜூன் 19-**

அன்புமணி தலைமையில் சேலத்தில் இன்று கட்சிக் கூட்டம் நடக்க உள்ள நிலையில், பா.ம.க., முக்கிய தலைவர்கள் ஜி.கே.மணி, எம்.எல்.ஏ. அருள் நெஞ்சு வலி காரணமாக அடுத்தடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பேசு பொருளாகியுள்ளது.



ஜி.கே.மணி - அருள் எம்.எல்.ஏ.

பா.ம.க., நிறுவனர் ராமதாஸுக்கும், அவரது மகன் அன்புமணிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, அன்புமணியை தலைவர் பதவியில் இருந்து நீக்கிய ராமதாஸ், இனி உயிர் இருக்கும் வரை பா.ம.க.,வின் தலைவர் பொறுப்பை தானே வகித்துக் கொள்வேன் என்று தீர்க்கமாக கூறி விட்டார்.

இதையடுத்து, பா.ம.க.,வில் இரு கோஷ்டிகள் உருவெடுத்துள்ளது. இதில், அன்புமணி பக்கமே அதிக நிர்வாகிகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இது ராமதாஸுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழலில், அன்புமணி தலைமையில் இன்று சேலத்தில் கட்சிக் கூட்டம் நடைபெற உள்ளது. இதில், அன்புமணியின் ஆதரவாளர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சேலம் மேற்கு தொகுதி பா.ம.க., எம்.எல்.ஏ., அருள் நெஞ்சு வலி காரணமாக சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து, தற்போது, பா.ம.க., கவுரவத் தலைவர் ஜி.கே., மணியும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சேலம் மற்றும் தருமபுரி மாவட்ட கட்சி பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க, அன்புமணி இன்று சேலம் செல்ல உள்ள நிலையில், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் தற்போது பேசு பொருளாகியுள்ளது.

### அனைத்து வாக்குச்சாவடிகளில்

# வாக்குப்பதிவை கண்காணிக்க இனி வெப்-காஸ்டிங் அறிமுகம்

### தலைமைத் தேர்தல் ஆணையம் முடிவு

**புதுடெல்லி, ஜூன் 19-**

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெறும் வாக்குப்பதிவைக் கண்காணிக்க வாக்குச்சாவடிகளில் வெப்-காஸ்டிங் (இணைய வழி மூலமாக நேரலை) முறையை அறிமுகம் செய்ய தலைமைத் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடிகளில் ஏற்படும் முறைகேடுகளைத் தவிர்க்க பல்வேறு முறைகளை தேர்தல் ஆணையம் கையாண்டு வருகிறது. தற்போது அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குப்பதிவை வீடியோ செய்தல் போன்ற பல்வேறு நடைமுறை தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் வாக்குச்சாவடிகளில் இணையவழி நேரலை எனப்படும் வெப்காஸ்டிங் மூலம் வாக்குப்பதிவை கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பதற்றமான வாக்குவாவடிகள் உள்ளிட்ட பல்வேறு வாக்குச்சாவடிகளில் இந்த வெப்காஸ்டிங் முறையைக் கடைப்பிடிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான திட்ட அறிக்கையை தேர்தல் ஆணையக் குழு, அனைத்து மாநில, யூனியன் பிரதேச தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது. மொத்தமுள்ள வாக்குச்சாவடிகளில் குறைந்தது 50 சதவீத வாக்குச்சாவடிகளில் வெப்காஸ்டிங் முறை கொண்டு வரப்படும் என்று தெரிகிறது. இதன்மூலம் மாவட்ட அளவில் தேர்தல் அதிகாரிகள், கண்காணிப்பு மையத்தில் அமர்ந்தவாறு வாக்குப்பதிவை கண்காணிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் இப்போது முருகனை கையில் எடுத்து உள்ளோம். அடுத்து தமிழகத்தை கையில் எடுப்போம் என்று கூறி உள்ளார். தமிழகத்தில் எப்போதுமே பா.ஜ.க கால் ஊன்ற முடியாது. அது எக்காரணத்தைக் கொண்டும் நடக்காது.

- கனிமொழி



தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே போவது மிகவும் வருத்தத்துக்குரியது. தமிழக அரசு போதைப்பொருட்களை முழுமையாக ஒழிக்கவும், சட்டம் ஒழுங்கை முறையாக சரியாக கடைபிடிக்கவும், பெண்கள் பாதுகாப்பாக இருக்கவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

- ஜி.கே.வாசன்



தமிழ்நாடு அரசு 2011-ம் ஆண்டுக்குப் பிறகு என்ற கட்டுப்பாடு விதித்து வெளியிட்டுள்ள அரசாணையை திரும்பப்பெற்று அர்ப்பணிப்புணர்வுடன் 23 ஆண்டுகள் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்துள்ள காவலர்கள் அனைவருக்கும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

- சீமான்



முன்னாள் பாஜக தலைவர் எல். முருகனை அடுத்து இப்போது நயினார் நாகேந்திரன் முருகனை கையில் எடுத்திருக்கிறார். முருக பக்தர்கள் மாநாடு என்ற போர்வையில் பாஜக விரிக்கும் மாய வலையில் நிச்சயம் தமிழ்நாட்டு மக்கள் எவரும் சிக்க மாட்டார்கள்.

- செல்வப்பெருந்தகை

மேலூர் நகர் அ.தி.மு.க. சார்பில்

# பூத் கமிட்டி ஆய்வு கூட்டம்: கிழக்கு மாவட்ட செயலாளர் ஆலோசனை



**மேலூர், ஜூன் 19-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி ஆணைக்கிணங்க மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலூர் நகர் சார்பில் வருகிற 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தல் பூத் வட்ட கழகத்தின் ஆய்வு கூட்டம் சந்தைப்பேட்டையில் நடைபெற்றது.

மேலூர் நகர் செயலாளர் எஸ்.எம். சரவணகுமார் தலைமை தாங்கினார். மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் செயலாளரும், மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் அமைப்புச் செயலாளர் காந்தி ஆகியோர் வரவேற்று பேசினர். மேலூர் நகர் அம்மா பேரவை செயலாளர் முன்னாள் நகர்மன்ற தலைவர் எம்.ஓ. சாகுல்ஹமீது முன்னிலை வகித்தார். அமைப்புச் செயலாளரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினருமான வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. ராஜன் செல்லப்பா பேசியதாவது:-

பாகம் முகவர்களாகிய நீங்கள் தான் கட்சிக்கு வெற்றியை தேடி தருபவர்கள். சென்ற தேர்தலில் மேலூர் தொகுதி தான் அதிமுகவிற்கு முதல் வெற்றியை பெற்று தந்தது. முதன்முதலில் அ.தி.மு.க. உருவாகியது தான் பாகமுகவர்கள் கூட்டம். தி.மு.க. வெறும் போட்டோ சூட்டில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் அரிவாள், கத்தி துப்பாக்கி என்று கொலை,கொள்ளை என்று நடைபெற்று கொண்டிருக்கிறது.

மோசமான நிலைக்கு திமுக ஆட்சி இன்று தள்ளப்பட்டு இருக்கிறது. ஊழலுக்காகவும், சட்ட ஒழுங்குக்காகவும் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டிருக்க கிறது. தி.மு.க.வின் பணபலம் நீடிக்காது. 2026-ல் தேர்தலில் தி.மு.க.வின் பணபலம் தோற்றுபோகும். மதுரையில் கலைஞர் பெயரில் நூலகம் மட்டும்தான் கட்டப்பட்டு இருக்கிறது. அதுவும் காட்சி பொருளாக தான் உள்ளது. அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு மைதானம் என்ற பெயரில் ஒரு மைதானத்தை கட்டி அதனை தி.மு.க.வினர் வாடகைக்கு விட்டு சம்பாதித்து இருக்கிறனர். ஸ்கூட்டர், தாலி தங்கம், அம்மா மினிகிளினிக் போன்ற அம்மா கொண்டுவந்த நல்ல திட்டங்களை தி.மு.க.வினர் மூடிவிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் எஸ். என். ராஜேந்திரன், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ் , மாவட்ட பொருளாளர் அம்பலம், தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைத் தலைவர் கௌரி சங்கர், ஒன்றிய செயலாளர்கள் கொட்டாம்பட்டி வெற்றிச்செழியன், நிலையூர் முருகன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஜபார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் அன்புச்செல்வன், முன்னாள் நகர் மாவட்ட பிரதிநிதி சீனிவாசன், மாவட்ட நிர்வாகிகள் தவபாண்டி, நாகசுப்பிரமணியன், மாணிக்கம், அய்யங்காளை, மீரா உசேன், லெட்சுமணன், மின்னல் மணி, சகுபர் அலி, நகர் நிர்வாகிகள் பூச்செண்டு, ரேணுகா, பாண்டி லெட்சுமி, திருப்பதி, அறிவழகன், மேகராஜ் பிபி, கந்தசாமி, சார்பு அணி நிர்வாகிகள் விஜயா அர்ச்சுணன், காதர்மைதீன், வெங்கடேசன், சேகர், பிரபாகரன் மற்றும் பகுதூர், ஆனை சேவுகன், மணிகண்டன், ராம்தாஸ், வட்ட செயலாளர்கள், பூத் கமிட்டி முகவர்கள், நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.3.70 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



**திருமங்கலம், ஜூன் 19-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் நகரில் இந்து அறநிலையத் துறை சார்பில் ரூ.3.70 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். திருமங்கலம் நகர்மன்ற தலைவர் மு.ரம்யா முத்துக்குமார் குத்துவிளக்கேற்றி வைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

திருமங்கலம் நகரில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வேங்கட சமுத்திரம் காட்டு பத்திரகாளி அம்மன் கோவிலுக்கு சொந்தமான நிலம் பாண்டியன் நகர் வடகரை பகுதியில் உள்ளது. இந்த இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்ட திருமண மண்டபம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத்துறை மூலம் பரிந்துரைக்கப்பட்டு கடந்த 2021- 22 -ம் நிதி ஆண்டில் ரூ.3.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருமண மண்டபம் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று அண்மையில் நிறைவு பெற்றது. திருமண மண்டப பணிகள் அனைத்தும் நிறைவு பெற்ற நிலையில் இந்த மண்டபத்தை திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தது. இதனிடையே திருமண மண்டபம் நேற்று திறந்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார்.இதில் திருமங்கலம் நகரில் ரூ.3.70 கோடி புதிதாக கட்டப்பட்டுள்ள காட்டு பத்திரகாளி அம்மன் கோவில் திருமண மண்டபத்தையும் காணொலி காட்சி மூலமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து புதிய திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் திருமங்கலம் நகர் மன்ற தலைவர் மு.ரம்யா முத்துக்குமார் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் மதுரை மாவட்ட இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் மாரியப்பன், உதவி ஆணையர் வளர்மதி, ஆய்வாளர் ராஜலட்சுமி, செயல் அலுவலர் அங்கயர்கன்னி, உதவியாளர் கவிதா, பத்ரகாளி கோவில் பூசாரி சகாதேவன், மீனாட்சி கோவில் அர்ச்சகர் சங்கர் நாராயண பட்டர், கவுன்சிலர் வினோத் மற்றும் கோவில் அலுவலக ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர். புதிதாக திறக்கப்பட்டுள்ள இந்த திருமண மண்டபம் உடனடியாக பயன்பாட்டுக்கு வருவதாகவும், திருமண விழா மற்றும் இதர நிகழ்வுகளுக்கு மண்டபத்தை முன்பதிவு செய்ய விரும்புகிறவர்கள் காட்டு பத்திரகாளியம்மன் கோவில் மற்றும் திருமங்கலம் மீனாட்சி அம்மன் திருக்கோயில் அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளலாம் என அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக திருமண மண்டப திறப்பு விழாவில் அதிகாரிகளின் அழைப்பின் பெயரில் திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவருமான ஆர்.பி. உதயகுமார் கலந்து கொண்டு மண்டபத்தை பார்வையிட்டார். அவருடன் கட்சி நிர்வாகிகள் விஜயன்,தமிழழகன், அன்பழகன், முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




**மருதீஸ்வரர் ஆன்மீக மக்கள் நலச்சங்கம் சார்பில் நடைபெற்ற ஜம்புத் தீவு பிரகடன விளக்க பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர். பா.சரவணன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் கலந்து கொண்ட மதுரை ஆதினத்திற்கு டாக்டர் சரவணன் நினைவு பரிசு வழங்கினார்.**

ஒட்டன்சத்திரத்தில்

# ரத்த தானம் - போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி

டி.எஸ்.பி. கார்த்திகேயன் பங்கேற்பு



**ஒட்டன்சத்திரம், ஜூன் 17-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையின் 70 வருடத்தை முன்னிட்டு ஒட்டன்சத்திரம் நகர்புற மற்றும் கிராம பகுதிகளை சார்ந்த இளைஞர்களுக்கு விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டியை ஒட்டன்சத்திரம் உதவி காவல் துறை கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தொடங்கி வைத்து பேசினார்.

கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர். அனீஸ் தாமஸ் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு குறித்து பேசினார். தொடர்ந்து இரத்த தானம் பற்றி மருத்துவர் மார்த்தா,மருத்துவர் சாம் உள்ளிட்டோர் பேசினர். இரண்டு நாட்கள் நடைபெற்ற போட்டியின் இறுதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டது . இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர் பகதூர் ராஜா உள்ளிட்ட இளைஞர்கள் கலந்து கொண்டார். முடிவில் மக்கள் தொடர்பு அலுவலர் கார்த்திக் நன்றி கூறினார்.

# அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை முதுகலை மருத்துவர்களுக்கு அசிம் பிரேம்ஜி ஹெல்த் ஈக்விடி பெல்லோஷிப்பை அறிவித்துள்ளது

**மதுரை, ஜூன் 19-**

அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை அசிம் பிரேம்ஜி ஈக்விடியை அறிவித்துள்ளது. முதுகலை மருத்துவர்களுக்கு 18 மாத தீவிரமான கற்றல் அனுபவமான முதுகலை மருத்துவர்களுக்காக வழங்குகிறது. இந்த பெல்லோஷிப் முயற்சியானது அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள 11 உயர் மருத்துவ கல்வி மையங்கள் வழங்க உள்ளன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக கிராமப்புறங்களில் வாழும் நோயாளிகளுக்கு உதவும் விதமாக மருத்துவ சேவை புரியும் வாய்ப்பைப் பெறுவார்கள். அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் வழிகாட்டுதலோடு மருத்துவ பயிற்சியை இளம் மருத்துவர்கள் பெறுவதோடு சமூகத்தில் இணைந்து பணியாற்றும் அனுபவமும் கிடைக்கும்.

இந்தத் திட்டத்தில் சேரும் மருத்துவர்கள் பெறும் அனுபவங்கள் பின்வருமாறு:களத்தில் பணிபுரிவதன் மூலம் மதிப்புமிகு கள அனுபவத்தை நேரடியாக பெறுவர்.மருத்துவ வசதி அனுவருக்கும் கிடைப்பதில் உள்ள சவால்களை ஆழமாக புரிந்துகொள்ள முடியும்.தாக்கத்தை ஏற்படுத்தும்.மருத்துவ தீர்வுகளை அனுபவம் வாய்ந்த மருத்துவர்களுடன் இணைந்து வழங்கும் வாய்ப்பு.நீடித்த மாற்றத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ள ஆர்வமுள்ள தனிநபர்களின் வலையமைப்பை உருவாக்குதல் ஆகும்.

# போர்டர் நிறுவனம் திருப்பூர் நகரத்துக்குள் லாஜிஸ்டிக்ஸ் சேவைகளை தொடங்குகிறது

**திருப்பூர், ஜூன் 19-**

இந்தியாவின் முன்னணி இன்ட்ராசிட்டி லாஜிஸ்டிக்ஸ் சேவை வழங்குநரான போர்டர் நிறுவனம் திருப்பூரில் தனது சேவையை தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இச்சேவை செயல்பாட்டில் கொண்டு வரப்பட்டதன் மூலம், நகரத்தில் பொருட்களை எளிதாக, தரமுடையவையாகவும் பாதுகாப்பான முறையிலும் எடுத்துச் செல்லும் போர்டரின் முக்கிய இலக்கை அடைவதில் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது. இந்த விரிவாக்கம், சென்னை மற்றும் கோயம்புத்தூரை உள்ளடக்கிய தமிழ்நாட்டில் போர்டரின் தற்போதைய டெலிவரி நெட்வொர்க்கை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளது.இது குறித்து போர்ட்டரின் விரிவாக்கத் தலைவர் அங்கித் திவேதி கூறுகையில், இரண்டாம் நிலை நகரங்களில் வாடிக்கையாளர்களின் அதிகரிக்கும் எதிர்பார்ப்புகள் மற்றும் வளர்ச்சியடைந்த வணிக செயல்பாடுகளால், கடைசி மைல் லாஜிஸ்டிக்ஸ் சேவைகளுக்கான தேவையானது குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

திருப்பூரில் போர்டரின் சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம், உள்ளூர் வணிகங்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் தங்களின் டெலிவரி செயல்முறைகளை மேலும் திறமையாக திட்டமிட்டு, வாடிக்கையாளர்களை பலனுடன் அணுகும் வகையில் செயல்பட முடியும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.மேலும், இந்த முயற்சி அந்தப் பகுதியில் உள்ள கிக் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் புதிய வருமான வாய்ப்புகள் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும். வாடிக்கையாளர்களின் மாறிக்கொண்டிருக்கும் தேவைகளை பூர்த்தி செய்யும் வரையில் மட்டும் அல்லாமல்,இந்த முயற்சி பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் சிறப்பான பங்களிப்பாக அமையும் என்று கூறினார்.

# சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூவில் 'நண்தோஸ்' பெரி-பெரி லவ்வின் 2வது அவுட்லெட் திறப்பு

**சென்னை, ஜூன் 19-**

சர்வதேச அளவில் விரும்பப்படும், சுடர்-வறுக்கப்பட்ட பெரி-பெரி சிக்கன் உணவகமான நண்தோஸ், இரண்டாவது காசாவுடன் (போர்த்துகீசிய மொழியில் வீடு என்று பொருள்படும் நண்தோஸ் உணவகங்களுக்கு அன்புடன் வழங்கப்படும் பெயர்) மீண்டும் வந்துள்ளது.இந்த முறை புகழ்பெற்ற எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் சென்னையை புயலால் தாக்கும் துணிச்சலான, உமிழும் சுவை இப்போது நகரத்தின் மையத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தப் புதிய காசாவுடன், நண்தோஸ் இந்தியா முழுவதும் அதன் சுவையான பயணத்தைத் தொடர்கிறது - மசாலா, மற்றும் அளப்பறியா சுவையை வழங்குகிறது. சென்னை என்பது சுவை, பாரம்பரியம் மற்றும் அனுபவத்தில் ஆழத்தைப் பாராட்டும் ஒரு நகரம். நண்தோஸ் இதைத்தான் மேசைக்குக் கொண்டு வருகிறது என்று நண்தோஸ் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி சமீர் பாசின் கூறினார்.

சென்னை சுவை, நெருப்பு மற்றும் சமூகத்தின் மீதான எங்கள் ஆர்வத்தை தெளிவாகப் பகிர்ந்து கொள்கிறது. மேலும் எக்ஸ்பிரஸ் அவென்யூ எங்கள் பெரி-பெரி கதையைத் தொடர சரியான மேடை நந்தோவின் அனைத்து பேஸ்டிங்ஸ், மரினேட்ஸ் மற்றும் சாஸ்கள் புதிய, உண்மையான பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன, மேலும் செயற்கை சுவைகள் அல்லது வண்ணங்கள் எதுவும் இல்லை. கோழி சுடர் அணலில் -வறுக்கப்படுகிறது.ஏனெனில் இது சிறந்த சுவை கொண்டது.மேலும் பெரி-பெரி சுவைகளின் வரம்பு விருந்தினர்கள் தங்கள் உணவை அவர்கள் தேர்ந்தெடுக்கும் வெப்ப நிலைக்குத் தனிப்பயனாக்க அனுமதிக்கிறது. வெப்பத்தைக் கையாளக்கூடியவர்களுக்கு கூடுதல் சூடாக. தடித்த வண்ணங்கள் முதல் கைவினைப் பொருட்கள் மற்றும் ஆஃப்ரோ-லூசோ பீட்ஸ் வரை, ஒவ்வொரு நந்தோஸ் காசாவும் ஒரு வளமான நவீன ஆப்பிரிக்க செல்வாக்கை பிரதிபலிக்கிறது.

# தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கு மாணவர்கள் சேர்க்கை

கலெக்டர் ஜெயசீலன் நேரில் பாராட்டினார்



**விருதுநகர், ஜூன் 19-**

விருதுநகர் மாவட்டத்தில், மாவட்டம் நிர்வாகம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களை உயர்கல்வியில் சேர்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கை பெறுவதற்காக கடந்தாண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தின் கல்லூரி கனவு நிகழ்வின் மூலம் தொடர்ச்சியாக பல்வேறு நுழைவு தேர்வு பயிற்சிகளும், வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.

இதன் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் விழிப்புணர்வு பெற்று, பயிற்சியின் மூலம் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று, நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கான சேர்க்கை பெற்று வருகின்றனர்.

அந்த வகையில், கிருஷ்ணன்கோவில் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயின்று, நான் முதல்வன் திட்டத்தின் கல்லூரி கனவு நிகழ்வின் மூலம் பயிற்சியும், வழிகாட்டுதலும் பெற்று, அம்ரிதா என்பவர் கிளாட் நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்று ஜபல்பூரில் உள்ள தேசிய சட்ட பல்கலைக்கழகத்திலும், ஆறுமுகம் மற்றும் ஆர்.விஜய் ஆகியோர் ஐ.ஐ.டி.டி.எம்-ஜே.இ.இ நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்று புவனேஷ்வரில் உள்ள ஐ.ஐ.டி.எம். கல்வி நிலையத்திலும் சேர்க்கை பெற்றுள்ளனர்.

மேலும், வத்திராயிருப்பு வட்டம் மகாராஜபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்களின் மகன்களான பி.விஜயகுமார் மற்றும் பி.தினேஷ் ஆகியோர் சிவகாசி வட்டம், பூவநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த மாணவர் மரியராஜ் பாண்டியன் என்பவர், இந்திய கடல் சார் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று படிப்பிற்கும் தேர்வாகி உள்ளனர்.

அதுபோல, கிருஷ்ணன் கோவில் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பயின்று 8 மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில தேர்ச்சி பெற்றுள்ள பெற்றுள்ளனர். அந்த வகையில் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ள இந்த 14 மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன், நேரில் அழைத்து பாராட்டி, மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து தலா ரூ.5 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.70 ஆயிரம் மதிப்பிலான தொகைகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# கிருஷ்ணன் கோவில் திருக்குளம் மேம்படுத்தும் பணி பூஜை



**விருதுநகர், ஜூன் 19-**

தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் தமிழக அரசு அறநிலையத்துறை மேம்பாட்டிற்காக பல்வேறு திட்ட பணிகளை சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார். இதில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுடன் இணைந்த கிருஷ்ணன்கோவில் எதிரே உள்ள திருக்குளம் மேம்படுத்தும் பணியும் அடங்கும்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீவில்லிபுத்தூர் கிருஷ்ணன் கோவில் எதிரே உள்ள திருக்குளம் ரூபாய் 2 கோடியே 28 லட்சம்மதிப்பிலான மேம்படுத்தும் பணிகள் துவக்க விழா நடைபெற்றது. கோவில் செயல் அலுவலர் சக்கரையம்மாள் குத்துவிளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைத்தார். திருக்கோவில் மணியம் கோபி தலைமையில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கண்காணிப்பாளர் ஆவுடையம்மாள் அறநிலையத்துறை உதவி பொறியாளர் விக்னேஷ் ராஜபாளையம் அப்சரா கன்சல்டென்சி இயக்குனர் பொறியாளர் முத்துக்குமாரசாமி மற்றும் கோவில் அலுவலர்களும் திருக்கோவில் பணியாளர்களும் கிருஷ்ணன் கோவில் தெரு ஊர் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

பின்னர் திருக்குளத்திற்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த பணிகள் துவங்கி ஒரு வருட காலத்திற்கும் தெப்பக்குளத்தின் நான்கு சுவர்கள் பலப்படுத்தப்பட்டு பொதுமக்கள் குளத்துக்குள் இறங்கி குளிப்பதற்கு வசதியாக கல் படிக்கட்டுகள் அமைத்து குளத்தை சுற்றி இரவு நேரங்களில் மின் விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வத்தலகுண்டு அருகே புதிய பயணிகள் நிழற்குடை திறப்பு



**வத்தலகுண்டு, ஜூன் 19-**

வத்தலக்குண்டு அருகில் உள்ள ரெங்கப்பநாயக்கன் பட்டி ஊராட்சியில் நிலக்கோட்டை எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணிகள் நிழற்குடை திறப்பு விழா வத்தலகுண்டு மேற்கு ஒன்றிய செயலாளர் சுதாகர் தலைமையில் நடைபெற்றது.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சதீஷ்குமார் வத்தலகுண்டு நகர செயலாளர் பீர்முகமது நிலக்கோட்டை செயலாளர் வி எஸ் எஸ் சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மொக்கையா தேவர் அ.தி.மு.க. முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பிச்சை ஆகியோர் வரவேற்றார்கள். சிறப்பு அழைப்பாளர்களாக நிலக்கோட்டை எம்.எல்.ஏ. தேன்மொழி சேகர் கலந்து கொண்டு பயணிகள் நிழற்குடையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் மணிகண்டன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய தலைவர் ராஜேந்திரன், மாவட்ட சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர் தம்பி ராஜா, பாசறை செயலாளர் வாடிப்பட்டி கோபி ராஜா, எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் ராமமூர்த்தி, ஒன்றிய இலக்கிய அணி செயலாளர் பாண்டி, ராதா, ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் திலிப்குமார், ஒன்றிய மாணவரணி செயலாளர் செல்லப்பாண்டி, வத்தலகுண்டு நகரத் துணைச் செயலாளர் குமரேசன், வார்டு செயலாளர் சுரேஷ், முகமது மைதீன், ரெங்கப்பநாயக்கன்பட்டி அ.தி.மு.க. நிர்வாகிகள் சந்திரன் விறு விறு கஜபதி, பொன்ராஜ், பெத்தன் ஜெயச்சந்திரன், ஜெயக்குமார், ராஜவேலு, ஐ.பாண்டி, சன்னாசி, எழுவனம்பட்டி நிர்வாகிகள் செல்வராஜ், பரமன் ஜெயராமன், மஞ்சன் உள்பட வத்தலகுண்டு ஒன்றிய, நகர, கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அட்டகாச சுவையுடன் ஹேசல்நட் கோகோ ஸ்ப்ரெட் பிராண்ட்

**சென்னை, ஜூன் 19-**

*Ferrero*வின் *Nutella®* ஹேசல்நட் கோகோ ஸ்ப்ரெட் பிராண்ட், '*Nutella*வுடன் காலை உணவின் சுவை சிறப்பாக இருக்கும்' என்ற பிரச்சாரத்துடன் தென்னிந்தியா முழுவதும் காலை உணவு மேசைகளுக்கு அதிக புன்னகையைக் கொண்டுவருகிறது.

ஹேசல்நட்ஸ் மற்றும் பிரீமியம் கோகோவிலிருந்து தயாரிக்கப்படும் அதன் சுவையான, கிரீமி தன்மையுள்ள, *Nutella®* தோசைகளுக்கு ஒரு சரியான துணையாக மாறுகிறது - பல வீடுகளில் காலை உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. காலை உணவை கவர்ச்சிகரமானதாகவும், சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் மாற்றுவதில் காலை உணவுப் பரவலின் பங்கை TVC வலுப்படுத்துகிறது.

இந்த விளம்பரப் பிரச்சாரம் குறித்து பேசிய *Ferrero India*வின் *Nutella®* -ன் சந்தைப்படுத்தல் தலைவர் ஜோஹர் கபுஸ்வாலா அவர்கள், "உலகளவில் மிகவும் விரும்பப்படும் காலை உணவுப் பரவல் பிராண்டுகளில் *Nutella®* ஒன்றாகும், மேலும் காலை உணவு மேசையைச் சுற்றி மகிழ்ச்சியான தருணங்களை உருவாக்குவதே எங்கள் குறிக்கோளாகும். தென்னிந்தியாவில், காலை உணவு பெரும்பாலும் சுவையான வீட்டுப் பாணி காலை உணவோடு தொடங்குகிறது. மேலும் *Nutella®* பல வீடுகளில் அந்த வழக்கத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. தோசை, நீர் தோசை, இட்லி மற்றும் அப்பம் போன்ற தென்னிந்திய விருப்பங்களுடன் *Nutella* எவ்வாறு நன்றாக இணைகிறது என்பதைக் காண்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இந்த தருணங்களை இன்னும் சிறப்பானதாக்குகிறோம். இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் மூலம், காலை உணவோடு வரும் சிறிய மகிழ்ச்சிகளைக் கொண்டாடுகிறோம், மேலும் தெற்குப் பகுதி முழுவதும் காலை உணவு மேசைகளுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொண்டுவர ஆவலுடன் காத்திருக்கிறோம்."

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நடிகர் ஜானகிராமன் மரணம்: எடப்பாடி பழனிசாமி இரங்கல்

**சென்னை, ஜூன் 19-**

நடிகர் ஜானகிராமன் மறைவுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட இரங்கல் செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் பணியாற்றி வரும் ராஜ்மோகனின் தந்தையும், நாடகம் மற்றும் திரைப்பட நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க முன்னாள் கமிட்டி உறுப்பினரும், வெற்றித் தலைவி கலைக்குழுவை நடத்தி வருபவருமான ஜானகிராமன் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

கட்சியின் மீதும், தொடர்ந்து தலைமையின் மீதும், விசுவாசம் கொண்டு பணியாற்றி வந்த ஆரம்ப கால உறுப்பினர். ஜானகிராமன் கழகத்தின் கொள்கைகளையும், முந்தைய கழக அரசுகளின் சாதனைகளையும், தற்போதைய தி.மு.க. ஆட்சியின் மக்கள் விரோதச் செயல்களையும், நாட்டு மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், தமது கலைக் குழுவின் மூலமாகஎடுத்துரைத்து, கட்சி பணிகளை நல்ல முறையில் ஆற்றியவர்.

பாசமிகு தந்தையை இழந்து மிகுந்த வேதனையில் வாடும் அன்புச் சகோதரர். ராஜ்மோகனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன், ஜானகிராமன் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# டி.கல்லுப்பட்டி அருகே சிவன் கோவிலில் சித்தரின் சிலையிலிருந்து தேன் வடிந்திடும் அதிசயம்: ஏராளமான மக்கள் வழிபாடு

**திருமங்கலம், ஜூன் 19-**

மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா டி.கல்லுப்பட்டி அருகே வி.குச்சம்பட்டி கிராமத்தில் சிவலிங்கமே ஆலயமாக அமைந்துள்ள ஸ்ரீ மஹாசித்தர் (ஜீவசமாதி) சிவன் கோவிலில் மஹாசித்தர் சிலையின் கையிலிருந்து தேன் வடிந்து வரும் நிகழ்வு அப்பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி வருகிறது.



மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா டி.கல்லுப்பட்டி அருகேயுள்ள வி.குச்சம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ மஹாசித்தரின் ஜீவசமாதி அமைந்துள்ளது. சுமார் 400 வருடங்களுக்கு முன்பாக சதுரகிரி சித்தர்கள் வாழும் மலைக்கு யாத்திரையாக வந்த மகான் ஸ்ரீ மஹாசித்தர் அருள்மிகு பாலாம்பிகை அம்மனின் வழிகாட்டுதலின் படி வி.குச்சம்பட்டி பகுதியில் தங்கியிருந்து மக்களுக்கு பல நன்மைகள் செய்து ஒரு ஆடி அமாவாசை தினத்தன்று தவத்தை நிறைவு செய்து அங்கு ஜீவசமாதி அடைந்துள்ளார். இந்த சித்தரின் அருளை பெற்றிடும் வகையில் வி.குச்சம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ மஹாசித்தர் அறக்கட்டளை யின் சார்பில் சிவலிங்கமே ஆலயமாக உள்ள ஸ்ரீ மஹாசித்தர் சிவன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஸ்ரீ மஹாசித்தர் அறக்கட்டளை நிர்வாகி சிவனடியார் முருகேசன் சுவாமிகளின் ஏற்பாட்டின் பேரில் தினம் தோறும் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன் கோவிலில் வளர்க்கப்பட்டு வரும் நாட்டு மாடுகள் மூலம் சேகரிக்கப்படும் பால் அப்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவதுடன் முக்கிய நாட்களில் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகிறது. இதனால் மஹாசித்தரின் அருள் பெற்றிட இக் கோவிலுக்கு ஏராளமான பொதுமக்கள் வந்து வழிபாடு நடத்தி செல்கின்றனர். இந்நிலையில் பல் வேறு அற்புதங்கள் நடைபெற்று வரும் இந்த கோவிலில் நேற்று முன்தினம் காலை முதல் மஹா சித்தரின் சிலையிலுள்ள அவரது கையிலிருந்து எண்ணை போன்ற திரவம் கசிந்து கீழே கொட்டியுள்ளது. இதனை கண்ட சிவனடியார் முருகேசன் சுவாமிகள் அது விளக்கிலிருந்த எண்ணெயாக இருக்கும் என்று எண்ணியுள்ளார். இருப்பினும் சிறிது நேரத்தில் கீழே கசிந்து சிந்திய திரவத்தை எறும்புகள் சுற்றி நின்றிருப்பதை கண்டு வியந்த சிவனடியார் முருகேசன் சுவாமிகள் அதனை எடுத்து ருசி பார்த்த போது அது சுவை மிகுந்த தேன் என்பது தெரிய வந்தது.

இதனிடையே வி.குச்சம்பட்டி மஹா சித்தர் கோவிலில் மஹாசித்தரின் சிலையிலுள்ள அவரது கையிலிருந்து தேன் வடிந்திடும் அதிசய நிகழ்வு அப்பகுதி மக்களிடையே வேகமாக பரவியது. இதையடுத்து சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கோவிலுக்கு திரண்டு வந்து மஹா சித்தரை வணங்கி வழிபாடு நடத்தினர். அப்போது சித்தரின் சிலையிலிருந்து வடிந்த தேனை பாத்திரம் வைத்து சேகரித்த சிவனடியார் முருகேசன் சுவாமிகள் பொது மக்களுக்கு பிரசாதமாக வழங்கி வருகிறார். டி.கல்லுப்பட்டி அருகேயுள்ள வி.குச்சம்பட்டி மஹாசித்தர் சிவன் கோவிலில் மஹா சித்தரின் சிலையிலிருந்து தேன் வடிந்திடும் நிகழ்வு சுற்றுப்புற கிராமப்புறங்கள் மட்டுமின்றி மதுரை மாவட்டத்திலுள்ள ஆன்மீக அன்பர்கள் மற்றும் பக்தர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

# உலக சுற்றுச்சூழல் தினம் மகளிர் கல்லூரியில் நடந்தது



**வத்தலகுண்டு, ஜூன் 19-**

திண்டுக்கல் மாவட்டம் தாமரைப்பாடி அருகில் விசுவ யுவகேந்திரா மற்றும் நிலக்கோட்டை வைகை அறக்கட்டளை இணைந்து புனித அந்தோனியார் மகளிர் கலை கல்லூரியில் உலக சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப்பட்டது இந்த விழாவில் மரக்கன்று நடுவிழா மற்றும் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழக அரசின் நீர் ஆதார பாதுகாப்பு காவலர் விருது பெற்ற முனைவர் நாராயணன் தலைமை வைக்க திண்டுக்கல் கூடு அறக்கட்டளை இயக்குனர் ஜெகதீசன் முன்னிலை வைக்க தமிழ்நாடு நன்னீர் மற்றும் சுகாதார கூட்டமைப்பு மாநில அமைப்பாளர் அண்ணாதுரை பிளாஸ்டிக்கிலா உலகை உருவாக்க இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பின் கீழ் கருத்துறை நிகழ்த்தினார் இதில் பிளாஸ்டிக் தற்பொழுது மிகப் பெரிய அச்சுறுத்தலாக உலகில் தலையெடுத்து வருகிறது. எதிர்வரும் காலங்களில் கடல் வாழ் உயிரினங்களும் மலைவாழ் உயிரினங்களும் நீர் ஆதார பகுதிகளும் பிளாஸ்டிக் கூடாரங்களாக மாறி வருவதால் இளைஞர்கள் ஆகிய நாம் பொறுப்புணர்ந்து பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக வேறு பொருட்களை பயன்படுத்தக்கூடிய நிலை உருவாக வேண்டும் மாற்றத்தை நம்மிடம் இருந்து கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறு கொண்டுவரப்பட்டால் தான் எதிர்வரும் காலத்தில் இந்த பூமி எதிர்கால சந்ததிகளுக்கு விட்டுச் செல்ல நேரிடும் என்று படத்துடன் விளக்கினார் பின்பு கல்லூரி முதல்வர் அருள் சகோதரி வனிதா அவர்கள் மரங்களை நட்டு நிறைவு செய்தார்.

மரம் மனிதனின் உரம்

# ஜூலை 10-12, 2025 வரை பிரிண்ட் எக்ஸ்போ மற்றும் மீடியா எக்ஸ்போ முதல் எடிஷன்!

**மதுரை, ஜூன் 19-**

இந்தியாவின் பிரிண்ட் மற்றும் விளம்பரத் துறைகள் மிகப் பெரிய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன, இது நிலையான நடைமுறைகள், டிஜிட்டல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை நோக்கிய வலுவான மாற்றத்தைக் குறிக்கிறது. வேகமாக வளர்ந்து வரும் இந்தப் பிரிவை முன்னிலைப்படுத்த, இரண்டு செல்வாக்குமிக்க கண்காட்சிகளாக பிரிண்ட் எக்ஸ்போ சென்னை மற்றும் மீடியா எக்ஸ்போ சென்னையின் முதல் எடிஷன் ஆனது வருகிற ஜூலை *10-12, 2025* வரை தமிழ்நாட்டில் சென்னை வர்த்தக மையத்தில் *175+* கண்காட்சியாளர்களுடன் ஒரே கூரையின் கீழ் நடக்கவிருக்கிறது.

ஷோகேஸ் டிரேட் ஃபேர்ஸ் அண்ட் பிசினஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்டின் நிர்வாக இயக்குனர் திரு அசோக் நீல்காந்த் கூறியதாவது: "பிரிண்ட் எக்ஸ்போ பல ஆண்டுகளாக தென்னிந்தியாவில் மிகவும் நம்பகமான மற்றும் செல்வாக்கு மிக்க பிரிண்ட் தளங்களில் ஒன்றாக வளர்ந்துள்ளது. இப்போது, மீடியா எக்ஸ்போ சென்னையில் தொடங்கப்படுவதன் மூலம், அச்சுப்பொறிகள், சந்தைப்படுத்துபவர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் பிற தொழில்துறை பங்குதாரர்களின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு கைகொடுக்கும் ஒரு உறுதியான தளத்தை நாங்கள் உருவாக்குகிறோம்.

கண்காட்சி முகப்பில், பிரிண்ட் எக்ஸ்போ 2025, பிண்ட்வெல், கேனான், பிரிண்ட், ஃபுஜிஃபிலிம், கொமோரி, கோனிகா மினோல்டா, மினோஷா, மோனோடெக், டெக்னோவா மற்றும் ஜெராக்ஸ் போன்ற முக்கிய பிராண்டுகளின் பங்கேற்பைக் காணும். இந்த நிறுவனங்கள் அடுத்த தலைமுறை பிரிண்டிங் மற்றும் பேக்கேஜிங் இயந்திரங்கள், *AI*-ஒருங்கிணைந்த பணிப்பாய்வுகள், கிளவுட் அடிப்படையிலான வேலை மேலாண்மை மற்றும் நிலையான அச்சு தீர்வுகளை நிரூபிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல், மீடியா எக்ஸ்போ *2025* கலர்ஜெட், ஜேஎக்ஸ் எண்டர்பிரைசஸ், எப்சன், லிஸ்கோ, மிமாகி, சிஎம்டி, லட்சுமி விற்பனை, கலர்ஸ் டிஜிட்டல் இந்தியா, கோ-சைன், பென்சன் பாலிமர், பிடிலைட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் பிற மதிப்பு மிக்க பிராண்டுகளைக் கொண்டுவரும்.

# மென்பொருளை அறிமுகப்படுத்திய விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் பல்கலை.,

**சென்னை, ஜூன் 19-**

கல்வியின் டிஜிட்டல் வளர்ச்சி துறையை மறுநிர்ணயிக்கக்கூடிய முன்னோடியான ஒரு முயற்சியாக, எச்சிஎல் டெக் கேரியர் ஷேபர் மற்றும் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் பல்கலைக்கழகம், கடந்த சனிக்கிழமை எச்சிஎல் டெக் வளாகத்தில், சோழிங்கநல்லூரில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் இந்தியாவின் முதல் அவுட்கம் - பேஸ்டு எஜிகேசன் டிஜிட்டல் மென்பொருளை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தினர். இந்நிகழ்வில் முன்னணி கல்வியாளர்கள், தொழில்துறை நிபுணர்கள் மற்றும் பார்வையுடன் செயல்படும் தலைவர்கள் பங்கேற்று, கல்வி மேலாண்மையில் ஏஐ மற்றும் டிஜிட்டல் தளங்களின் வளர்கின்ற பங்கு குறித்த புதிய பார்வையை பகிர்ந்துகொண்டனர். இந்த டிஜிட்டல் மென்பொருள், தொழில்துறையின் தற்போதைய தேவைகளுடன் நேரடியாக இணைந்ததாகவும், திறனடிப்படையிலான மாற்றத்திற்கான சூழல் ஒன்றை ஏற்படுத்துவதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு, எதிர்கால கல்வி மாற்றத்திற்கான ஒரு வரவேற்பு உரையுடன் தொடங்கியது.

இதில் செயற்கை நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு சார்ந்த கற்றல் முடிவுகள் இடம்பெற்றுள்ளன. பின்னர் நடைபெற்ற பகிர்வுரை அமர்வில், கல்வி மேலாண்மையில் ஏஐ மற்றும் டிஜிட்டலின் எதிர்கால பங்கு" என்ற தலைப்பில் சிந்தனையை தூண்டும் விவாதம் நடைபெற்றது. இதில் கல்வி மற்றும் தொழில்துறையின் இடையிலான ஆழமான ஒத்துழைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. மாணவர்களும் பேராசிரியர்களும் எச்சிஎல் டெக் வழியாக மேற்கொண்ட இறுதி ஆண்டு இண்டர்ன்ஷிப் மற்றும் தொழில்துறை சார்ந்த திட்டங்களில்(ப்ராஜெக்ட்) அவர்கள் அளித்த முக்கிய பங்களிப்புக்காக பாராட்டும் விருதுகளும் வழங்கப்பட்டன. தொடக்க விழாவில் எச்சிஎல் டெக் கேரியர் ஷேபர் மற்றும் விஎம்ஆர்எப்-ஐச் சேர்ந்த பிரதிநிதிகள், தொழில்துறைத் தேவைகளுக்கும் வகுப்பறை கற்றலுக்கும் இடையிலான பிளவை அகற்ற, அளவீட்டுக்குட்பட்ட, தொழில்நுட்ப முன்னேற்றம் கொண்ட கல்வி மாதிரிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். உசிலம்பட்டி.**
**ஓ.மு.எண்:5243/2024/ஆ3**

ராஜேஸ்கண்ணா, த/பெ.ராம்ராஜ்
2/1038,ஸ்டேட்பாங்க், சாட்சியாபுரம்
செங்கமலநாச்சியார்புரம், சிவகாசி
விருதுநகர் மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாராகிய நான், எனது தாத்தா முத்துரெட்டியார், த/பெ. அருணாச்சலரெட்டியார் என்பவர் கடந்த 08.08.1977-ம் தேதி பேரையூர் வட்டம்,சின்னாரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
ராஜேஸ்கண்ணா
சிவகாசி,
விருதுநகர் மாவட்டம்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.**
**ந.க.எண்.3979/2025/ஆ6**
**இ.ப.வ.எண்.419/2024/ஆ6**

T.சுப்பிரமணி ,
த/பெ தங்கவேல்கவுடர்,
க. எண். 4/381, வடக்குத்தெரு,
கோணப்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாடச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி நிர் மனுதாரரர் தாயார் ராமக்காள் என்பவர் 14.11.2016 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

**முதன்மை சார்பு நீதிமன்றம், திண்டுக்கல்**
**ஓ.எஸ்.எண்.585/2017**

புழனிச்சாமி
.... மனுதாரர்
எதிர்
ஆரியமலர், க/பெ.சவடமுத்து,
த/பெ. லேட்.பெருமாள்,
கன்னடம்பட்டி,
புதுக்கோட்டை கிராமம்,
திண்டுக்கல் மேற்கு தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்
... 3ம் பிரதிவாதி

**அறிவிப்பு**

மேற்படி நம்பர் வாதி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மேற்படி நம்பரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராக வரும் 30.06.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே 3ம் பிரதிவாதி வரும் 30.06.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் 3ம் பிரதிவாதி மீது ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்புவிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

டி.சிவச்சந்திரன் பி.ஏ.எல்.எல்.பி.,
வழக்கறிஞர், திண்டுக்கல்.
செல் எண்.9942297828

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண் : 7451/2024/அ.3**

N. இளையராஜா, S/o.நல்லுச்சாமி ,
92, மேலவளவு,
மேலவளவு கிராமம்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. சார்பதிவாளர் அவர்கள்
கருங்காலக்குடி
....... எதிர்மனுதாரர்

மனுதார் N. இளையராஜா என்பவரின் தன்னுடைய பிறந்த தேதியான 22.04.1985-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலவளவு கிராமம், மேலவளவு கிராமவீட்டில் பிறந்ததை அவரது பிறப்பை மேலவளவு கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

N. இளையராஜா
மனுதாரர்

## பொது அறிவிப்பு

எங்களது கட்சிக்காரர் திரு. N. சரவணகுமார், த/பெ. நடேசன், கதவு எண். 4-3-12, மகாத்மா காந்திஜி தெரு, பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம். அவர்களின் தகவலின் பேரில் இப் பொது அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், எனது கட்சிக்காரர், திரு. N. சரவணகுமார், Neomax லிமிடெட் நிறுவனத்தில் முகவராக செயல்பட்டு வருகிறார். நிறுவன நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பல முதலீட்டாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பின்வரும் காசோலை எண்கள் நிறுவன முதலீடுகளுக்காக நீண்ட காலத்திற்கு முன்பே வழங்கப்பட்டன: ஆக்சிஸ் வங்கி கணக்கு எண்: 910010050103086 காசோலை எண்கள். 213466 முதல் 213468 வரை, 065207 முதல் 065215 வரை, 065217, 065218, 065220, 185621, 029491, 037181 முதல் 037187 வரை, 012044 முதல் 012049 வரை, 012057 முதல் 012060 வரை, 078681 முதல் 078684 வரை மற்றும் 078691, 078688,078692 முதல் 078700 வரை. கனரா வங்கி கணக்கு எண்: 4743101000253 காசோலை எண்கள். 651506 மற்றும் 651507. எக்விடாஸ் வங்கி கணக்கு எண்: 100002568161 காசோலை எண்கள்.000002, 000003, 000006 முதல் 000009 வரை. பாரத ஸ்டேட் வங்கி கணக்கு எண்:20065878221 காசோலை எண்கள். 643734, 643736, 643737, 643703, 643701, 643706 முதல் 643719 வரை, 643712, 643714 முதல் 643719 வரை, 643724, 643726, 643730, 643732, 643733, 328631 முதல் 328633 வரை, மற்றும் 328631 முதல் 328640 வரை. மேற்படி வங்கி கணக்குகளில் சில ஏற்கனவே மூடப்பட்டு விட்டன.

மேற்கண்ட காசோலை எண்கள் அனைத்தும் நிறுவன வணிக தொடர்புகளுக்காக வழங்கப்பட்டவை. இந்தக் காசோலைகள் தொடர்பாக எனது கட்சிக்காரருக்கு எந்த தனிப்பட்ட பொறுப்பும் இல்லை. சில காசோலைகள் சட்டவிரோதமாகத் திருடப்பட்டு அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டு, தவறான வழக்குகளைத் தொடுப்பதற்குப் பயன்படுத்தப்படலாம்.

எனவே, இந்தக் காசோலைகள் தொடர்பாக எந்தவொரு தனிப்பட்ட கோரிக்கையும் அல்லது பரிவர்த்தனையும் எனது கட்சிக்காரரின் மீது சுமத்தப்பட்டால், அது முற்றிலும் ஆதாரமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்பை மீறி எவரேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன்.

இங்கனம்,
B. பாண்டியராஜ்,
V. ஸ்ரீசிவனாத்,
வழக்கறிஞர்கள்,
58, சந்தைப்பேட்டை தெரு, போடிநாயக்கனூர் - 625513, தேனி மாவட்டம்.

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.**
**ந.க.எண்.0703/2025/ஆ2**

க.ஆதிமூலம், த/பெ.கந்தசாமித்தேவர்
3/349,காளியம்மன் கோவில் தெரு
சிவரக்கோட்டை கிராமம், கள்ளிக்குடி
வட்டம், மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
--------------- எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தாயார் ஜெயமீனாள், க/பெ.கந்தசாமித்தேவர், த/பெ.குருசாமித்தேவர் என்பவர் கடந்த 29.03.1999-ம் தேதி கள்ளிக்குடி வட்டம், சிவரக்கோட்டை கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
க.ஆதிமூலம்
சிவரக்கோட்டை கிராமம்.

### கக்கனின் 117-வது பிறந்தநாள் விழா:
# அனைத்துக்கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

**மேலூர், ஜூன் 19-**

தியாக சீலர் கக்கனின் *117*-வது பிறந்த நாளை முன்னிட்டு தும்பைபட்டியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் கக்கனின் திருவுருவ சிலைக்கு தமிழக அரசுசார்பில் மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா, மேலூர் தாசில்தார் செந்தாமரை, கொட்டாம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தும்பைபட்டி ஊராட்சி செயலர் கணேசன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். திமுக சார்பில் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ராஜராஜன் தலைமை யில் தி.மு.க. நிர்வாகிகள், ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், அ.தி.மு.க. சார்பில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன் செல்லப்பா தலைமையில் மேலூர் தொகுதி எம்.எல்.ஏ பெரியபுள்ளான் என்ற செல்வம், முன்னாள் எம்எல்ஏ தமிழரசன், கழக அமைப்புச் செயலாளர் மேலூர் தொகுதி பொறுப்பாளர் காந்தி, கொட்டாம்பட்டி முன்னாள் சேர்மன் வெற்றிச்செழியன், முன்னாள் மேலூர் யூனியன் சேர்மன் பொன்னுச்சாமி, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் வக்கீல் ரமேஷ், மாவட்ட அவைத்தலைவர் ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் அம்பலம், துணை செயலாளர் சந்திரன், மேலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பொன் ராஜேந்திரன், திருப்பரங்குன்றம் ஒன்றிய கழகச் செயலாளர் நிலையூர் முருகன், மேலூர் நகரச் செயலாளர் சரவணகுமார், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைச் செயலாளர் விஷ்ணுவேல், பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஜபார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் அன்புச் செல்வன், ஆகியோர் கக்கன் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

உடன் மாவட்ட விவசாய பிரிவு துணைச் செயலாளர் வெள்ளரிப்பட்டி பிரபு, நகர் துணைச் செயலாளர் எம். கே.பி. அருண், தலைமைக் கழக பேச்சாளர் மலைச்சாமி, இளைஞர் அணி சந்திரன், சேக்கிபட்டி சாகுல் ஹமீது, கருணாநிதி, வெங்கடேசன், பாசறை செயலாளர்கள் கார்த்தி, வெங்கடேசன், முருகேசன், உதயகுமார், முன்னாள் பூதமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி சின்னகருப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கிடாரிபட்டி சுரேஷ், பூதமங்கலம் ஜரினா சிக்கந்தர் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாடு அரசு**
## பொதுப்பணித்துறை
**கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்**

மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மொத்ததொகை ஒப்பந்த முறை (இரு உறை முறை)
மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் 10/2025-2026/க.பொ/க(க&ப)வட்டம்/சேலம்/ நாள் 13.06.2025

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் -7 அவர்களால் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறை முறையில் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை "https://tntenders.gov.in" என்ற இணையதளத்தில் 19.06.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 04.07.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 04.07.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 04.07.2025ல் பிற்பகல் 3.30 மணிக்கு இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர்களுக்கு நபார்டு வங்கி நிதி உதவியுடன் விடுதி கட்டடம் கட்டும் பணி | 512.00 | 2,66,000 | 240 நாட்கள் |

| | | |
|---|---|---|
| ஒப்பந்ததாரர் வகுப்பு | : | பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு IIல் மாநில அளவில் / இவ்வட்ட அளவில் (ரூ.5.00 கோடி முதல் ரூ.10.00 கோடி வரை) மற்றும் அதற்கு மேல் |
| முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் | : | முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம். |

பணியின் பெயர், முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையத்தளத்தில் "https://tntenders.gov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம்;"https://tntenders.gov.in"-ல் பதிவேற்றம்

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., சார்பில்,
கட்டட (க&ப) வட்டம், சேலம்-7.

செ.ம.தொ.இ./3073/ஒப்பந்தப்புள்ளி/ 2025

**தமிழ்நாடு அரசு**
## பொதுப்பணித்துறை
**கட்டட அமைப்பு – ஒப்பந்த முறை : மொத்த தொகை**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.**8/VLR-CLE/2025-2026/Dated: 17.06.2025**

தமிழ்நாடு ஆளுநருக்ககாகவும் அவர் சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிகளுக்கு 09.07.2027 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 19.06.2025 முதல் 09.07.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்படும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 09.07.2025 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்களில் உட்பட) |
|---|---|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை மாவட்டம், கலவை அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டும் பணி | 165.10 | ரூ.93,000/– | 5 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி — வகுப்பு IV மற்றும் அதற்கு மேல்
தள ஆய்வுச் சான்று பெற விண்ணப்பிக்க கடைசி நாளும், இடமும் — 07.07.2025 – செயற் பொறியாளர், பொ.ப.து. அலுவலகம், கட்டட (க&ப) கோட்டம், இராணிபேட்டை

முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிக்கு பொருந்தும்.

இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர்–1

செ.ம.தொ.இ/3084/ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு**
## பொதுப்பணித்துறை
**கட்டடம் (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை–5.**

**குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 09 கட்டட (க&ப) வட்டம் 2, 2025-2026, நாள்: 17.06.2025**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை /இன விலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க (ம) ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | சென்னை 85, கோட்டூர்புரத்தில் உள்ள அரசின் பழைய தரவுகள் மையக்கட்டடத்தில் தரைத்தளம் மற்றும் இரண்டாவது தளத்தில் உள்ள இதழியல் மற்றும் ஊடக ஆய்வுகள் நிறுவனத்திற்கு வீடியோ அறை, கருத்தரங்கம், வகுப்பறைகள் மற்றும் பிற வசதிகளை அமைக்கும் பணி. மு.வை.தொகை: ரூ.2,32,000/- | ரூ.443.85 இலட்சங்கள் | 5 மாதங்கள் | வகுப்பு III மற்றும் அதற்குமேல் |

(1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும். (2) பணித்தள வருகை சான்றிதழுக்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 25.06.2025. (3) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 27.06.2025 மாலை 03.00 மணி வரை (4) ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 27.06.2025 மாலை 04.00 மணி.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை–5.

செமதொஇ/ 3067 /ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு**
## பொதுப்பணித்துறை
**கட்டடம் (க &ப ) வட்டம் திருச்சி-1.**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 08 க.பொ/க (க & ப) வட்டம். / திருச்சி /2025-2026/ நாள் : 16.06.2025

இனவிலை முறை ஒப்பந்தவகை : ஒட்டுமொத்தம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடம் (க &ப ) வட்டம் , திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பணியின்பெயர் | பணியின் தோராய மதிப்பு தொகை (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு (திருத்திய வகுப்பின் படி) |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் மாவட்டம், **இலையூர்** அரசு உயர் நிலைப்பள்ளியில் 8 கூடுதல் வகுப்பறைகள், 1 ஆண்கள் கழிவறை , 1 பெண்கள் கழிவறை மற்றும் குடிநீர் வசதியுடன் கட்டும் பணி. | ரூ. 198.20 | ரூ 1,09,100/- | 7 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்கு மேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 23.06.2025 முதல் 08.07.2025 மாலை 3.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 08.07.2025 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 09.07.2025 மாலை 3.30 மணி முதல்.
5. மேலும் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருந்தால் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர் பொபது.,
கட்டட (க & ப) வட்டம் , திருச்சி-1.

செமதொஇ / 3048/ஒப்பந்தப்புள்ளி/ 2025

# சிறிய நாடுகளுக்கான டெஸ்ட் போட்டி 4 நாட்களாக குறைப்பு

## ஐ.சி.சி தலைவர் ஜெய்ஷா ஆதரவு



**லண்டன், ஜூன் 19-**

டெஸ்ட் போட்டிகளை நடத்த செலவு அதிகமாவதாக டெஸ்டை நடத்தும் சிறிய நாடுகள் தயக்கம் காட்டும் நிலையில், சிறிய நாடுகளுக்கான டெஸ்ட் போட்டிகளை 4 நாட்களாக குறைக்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**2019-ல் அறிமுகம்....**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியை ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் கவுன் சில்) 2019-ம் ஆண்டு அறிமுகம் செய்தது. இதுவரை 3 தொடர் முடிந்துள்ளது. நியூசிலாந்து (2019-21), ஆஸ்திரேலியா (2021-23), தென் ஆப்பிரிக்கா (2023-25) ஆகிய நாடுகள் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பை கைப்பற்றியுள்ளன.

**4 நாட்களாக குறைக்க...**

இந்த நிலையில் 2027-29ம் ஆண்டுக்கான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரில் சிறிய நாடுகளுக்கான டெஸ்ட்களை 4 நாட்களாக குறைக்க ஐ.சி.சி. தயாராக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேநேரத்தில், இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய 3 அணிகளும் மாற்றமின்றி வழக்கமான 5 நாட்களுக்கு விளையாடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறிய நாடுகள் விளையாடும் டெஸ்ட்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அவற்றுக்கான செலவுகளை குறைக்கவும் இந்த முடிவு மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது.

**ஜெய்ஷா ஆதரவு....**

லண்டனின் லார்ட்ஸ் மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி போட்டியின்போது, 2027-29 டெஸ்ட் தொடரில் சிறிய அணிகளுக்கான டெஸ்டை 4 நாட்களாக குறைப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அப்போது, ஐ.சி.சி தலைவர் ஜெய்ஷா இந்த முடிவுக்கு தனது ஆதரவை தெரிவித்ததாக கூறப்படுகிறது. தங்களுக்கான அட்டவணையில் அதிக நாட்களை எடுத்துக் கொள்வதாலும், செலவும் அதிகமாவதாலும் டெஸ்டை நடத்த சிறிய நாடுகள் தயக்கம் காட்டுகின்றன.

**ஓவர்கள் அதிகரிப்பு...**

ஒரு டெஸ்ட்டுக்கான நாட்களை 5-க்கு பதிலாக 4-ஆக குறைக்கும்போது, 3 போட்டி கொண்ட தொடரை 3 வாரங்களுக்கு உள்ளாக முடிக்க இயலும். இது, அந்த நாடுகள் டெஸ்டை நடத்த உந்துதல் அளிக்கும். குறைக்கப்படும் ஒருநாளின் ஆட்ட நேரத்தை சமன் செய்ய ஒரு நாளுக்குள் வீசப்படும் ஓவர்களின் எண்ணிக்கையை 90-ல் இருந்து 98 ஆக அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

# 2026 மகளிர் டி-20 உலகக்கோப்பை: முழு அட்டவணை விவரம் வெளியீடு

**லண்டன், ஜூன் 19-**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மகளிர் டி-20 உலகக் கோப்பைக்கான முழு அட்டவணை விவரம் வெளியாகியுள்ளது.

**இரு பிரிவுகளாக...**

மகளிர் டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு ஜூன் 26-ம் தேதி தொடங்குகிறது. இங்கிலாந்தில் நடைபெறும் இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான் உள்பட 12 அணிகள் பங்கேற்கின்றனர். இந்த தொடரில் அணிகள் இரு பிரிவுகளாக நடத்தப்படுகிறது. குரூப் ஏ பிரிவில் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 4 அணிகளுடன் 2 குவாலிபையர் அணிகள் இடம் பெற்றுள்ளனர்.

**முதல் ஆட்டத்தில்...**

பி பிரிவில் வெஸ்ட் இண்டீஸ், இங்கிலாந்து, நியூசிலாந்து, இலங்கை ஆகிய 4 அணிகளுடன் 2 குவாலிபையர் அணிகள் இடம் பெற்றுள்ளனர். இந்த தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து- இலங்கை அணிகள் ஜூன் 12-ம் தேதி மோதுகிறது. இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானுடன் ஜூன் 14-ம் தேதி மோதுகிறது.

டி-20 உலகக்கோப்பையின் முழு அட்டவணை (2026):

1) வெள்ளிக்கிழமை ஜூன் 12: இங்கிலாந்து vs இலங்கை, எட்ஜ்பாஸ்டன்.

2) சனிக்கிழமை ஜூன் 13: தகுதிச் சுற்று vs தகுதிச் சுற்று, ஓல்ட் டிராஃபோர்ட் கிரிக்கெட் மைதானம்.

3) சனிக்கிழமை ஜூன் 13: ஆஸ்திரேலியா vs தென்னாப்பிரிக்கா, ஓல்ட் டிராஃபோர்ட் கிரிக்கெட் மைதானம்.

4) சனிக்கிழமை ஜூன் 13: மேற்கிந்திய தீவுகள் vs நியூசிலாந்து, ஹாம்ப்ஷயர் பவுல்.

5) ஞாயிற்றுக்கிழமை ஜூன் 14: தகுதிச் சுற்று vs தகுதிச் சுற்று, எட்ஜ்பாஸ்டன்.

6) ஞாயிற்றுக்கிழமை ஜூன் 14: இந்தியா vs பாகிஸ்தான், எட்ஜ்பாஸ்டன்.

7) செவ்வாய் ஜூன் 16: நியூசிலாந்து vs இலங்கை, ஹாம்ப்ஷயர் பவுல்.

8) செவ்வாய் ஜூன் 16: இங்கிலாந்து vs தகுதிச் சுற்று, ஹாம்ப்ஷயர் பவுல்.

9) புதன்கிழமை ஜூன் 17: ஆஸ்திரேலியா vs தகுதிச் சுற்று, ஹெடிங்லி.

10) புதன் ஜூன் 17: இந்தியா vs தகுதிச் சுற்று, ஹெடிங்லி.

11) புதன் ஜூன் 17: தென்னாப்பிரிக்கா vs பாகிஸ்தான், எட்ஜ்பாஸ்டன்.

12) வியாழன் ஜூன் 18: மேற்கிந்திய தீவுகள் vs தகுதிச் சுற்று, ஹெடிங்லி.

13) வெள்ளி ஜூன் 19: நியூசிலாந்து vs தகுதிச் சுற்று, ஹாம்ப்ஷயர் பவுல்.

14) சனிக்கிழமை ஜூன் 20: ஆஸ்திரேலியா vs தகுதிச் சுற்று, ஹாம்ப்ஷயர் பவுல்.

15) சனிக்கிழமை ஜூன் 20: பாகிஸ்தான் vs தகுதிச் சுற்று, ஹாம்ப்ஷயர் பவுல்.

16) சனிக்கிழமை ஜூன் 20: இங்கிலாந்து vs தகுதிச் சுற்று, ஹெடிங்லி.

17) ஞாயிற்றுக்கிழமை ஜூன் 21: மேற்கிந்திய தீவுகள் vs இலங்கை, பிரிஸ்டல் கவுண்டி மைதானம்.

18) ஞாயிற்றுக்கிழமை ஜூன் 21: தென்னாப்பிரிக்கா vs இந்தியா, ஓல்ட் டிராஃபோர்ட் கிரிக்கெட் மைதானம்.

19) செவ்வாய் ஜூன் 23: நியூசிலாந்து vs தகுதிச் சுற்று, பிரிஸ்டல் கவுண்டி மைதானம்.

20) செவ்வாய் ஜூன் 23: இலங்கை vs தகுதிச் சுற்று. பிரிஸ்டல் கவுண்டி மைதானம்.

21) செவ்வாய் ஜூன் 23: ஆஸ்திரேலியா vs பாகிஸ்தான், ஹெடிங்லி.

22) புதன் ஜூன் 24: இங்கிலாந்து vs மேற்கிந்திய தீவுகள், லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானம்.

23) வியாழன் ஜூன் 25: இந்தியா vs தகுதிச் சுற்று, ஓல்ட் டிராஃபோர்ட் கிரிக்கெட் மைதானம்.

24) வியாழன் ஜூன் 25: தென்னாப்பிரிக்கா vs தகுதிச் சுற்று, பிரிஸ்டல் கவுண்டி மைதானம்.

25) வெள்ளி ஜூன் 26: இலங்கை vs தகுதிச் சுற்று, ஓல்ட் டிராஃபோர்ட் கிரிக்கெட் மைதானம்.

26) சனிக்கிழமை ஜூன் 27: பாகிஸ்தான் vs தகுதிச் சுற்று, பிரிஸ்டல் கவுண்டி மைதானம்.

27) சனிக்கிழமை ஜூன் 27: மேற்கிந்திய தீவுகள் vs தகுதிச் சுற்று, பிரிஸ்டல் கவுண்டி மைதானம்.

28) சனிக்கிழமை ஜூன் 27: இங்கிலாந்து vs புதியது ஜீலாந்து, ஓவல்.

29) ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை: தென்னாப்பிரிக்கா vs தகுதிச் சுற்று, லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானம்.

30) ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை: ஆஸ்திரேலியா vs இந்தியா, லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானம்.

31) செவ்வாய் ஜூன் 30: TBC vs TBC (அரையிறுதி 1), தி ஓவல்.

32) ஜூலை 2 வியாழக்கிழமை: TBC vs TBC (அரையிறுதி 2), தி ஓவல்.

33) ஜூலை 5 ஞாயிற்றுக்கிழமை: TBC vs TBC (இறுதி), லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானம்.

# அணி டெஸ்ட் கேப்டன் பொறுப்பை ஏற்காதது ஏன்? பும்ரா விளக்கம்

**மும்பை, ஜூன் 19-**

இந்திய அணியின் கேப்டனாக சுப்மன் கில்லும் துணை கேப்டனாக ரிஷப் பண்டும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கேப்டன் பதவியை விட கிரிக்கெட்டை தான் நான் அதிகம் நேசிக்கிறேன் என்று டெஸ்ட் கேப்டன் பொறுப்பை நிராகரித்தது குறித்து பும்ரா விளக்கம் அளித்துள்ளார்.

**5 போட்டிகள்...**

இந்திய அணி இங்கிலாந்து சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஜூன் 20-ம் தேதி லீட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது. இந்த தொடரில் இந்திய அணியின் கேப்டனாக சுப்மன் கில்லும் துணை கேப்டனாக ரிஷப் பண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். பும்ராவிற்கு டெஸ்ட் கேப்டன் பதவி வழங்கப்படும் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், சுப்மன் கில்லுக்கு கேப்டன் பதவி வழங்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

**பி.சி.சி.ஐ. அணுகியது...**

இந்நிலையில், டெஸ்ட் அணியின் கேப்டன் பதவியில் நியமிக்க பி.சி.சி.ஐ. அணுகியதாகவும் ஆனால் தான் அதை வேண்டாம் என்று நிராகரித்து விட்டதாக பும்ரா தெரிவித்துள்ளார். ஸ்கை ஸ்போர்ட்ஸ் கிரிக்கெட்டில் தினேஷ் கார்த்திக் உடனான உரையாடலின் போது, பும்ரா இவ்வாறு தெரிவித்தார். அந்த பேட்டியில் பேசிய அவர், "ரோகித் சர்மா ஓய்வு பெற்ற நிலையில் டெஸ்ட் அணியின் துணை கேப்டனாக இருந்த தன்னை கேப்டன் பதவியில் நியமிக்க பி.சி.சி.ஐ. அணுகியது. இருப்பினும் பணிச்சுமை மற்றும் அடிக்கடி காயம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு அந்த வாய்ப்பை தான் நிராகரித்தேன்.

**மிகப்பெரிய மரியாதை...**

இங்கிலாந்து டெஸ்ட் தொடர் முழுவதும் என்னால் விளையாட முடியுமா என்ற சந்தேகம் இருக்கும்போது, நான் எப்படி கேப்டன்சி செய்ய முடியும்? 3 போட்டிகளுக்கு ஒருவர் கேப்டனாகவும் 2 போட்டிகளுக்கு மற்றொருவர் கேப்டனாகவும் இருப்பது சரியல்ல. அணிக்கு எது முக்கியமோ அதைதான் நான் செய்தேன். இந்திய டெஸ்ட் அணியை வழிநடத்துவது மிகப்பெரிய மரியாதை. ஆனால் கேப்டன் பதவியை விட கிரிக்கெட்டை தான் நான் அதிகம் நேசிக்கிறேன். அதனால் ஒரு வீரராக இந்திய அணிக்கும் அதிக பங்களிப்பை வழங்க விரும்புகிறேன்" என்று தெரிவித்தார்.

# கனடா பயணத்தை நிறைவு செய்து குரோஷியா சென்றார் பிரதமர் மோடி

**ஒட்டாவா, ஜூன் 19-**

கனடா பயணத்தை நிறைவு செய்து குரோஷியா சென்றார் பிரதமர் மோடி. அங்கு ஜனாதிபதி சோரன் மிலனொவ் மற்றும் பிரதமர் பென்கொவிக்கை சந்திக்கிறார்.

பிரதமர் மோடி அரசு முறை பயணமாக வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். பயணத்தின் முதல் நாடாக அவர் கடந்த 15ம் தேதி சைப்ரஸ் சென்றார். அங்கு அந்நாட்டு ஜனாதிபதி கிறிஸ்டோடவுலிட்சை பிரதமர் மோடி சந்தித்தார். இதனை தொடர்ந்து பிரதமர் மோடி கனடா சென்றார். கனடாவின் கன்னாஸ்கிஸ் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஜி7 உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டில் கனடா பிரதமர், இத்தாலி, பிரான்ஸ் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களை பிரதமர் மோடி சந்தித்தார்.இந்நிலையில், கனடா பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி அங்கிருந்து புறப்பட்டு குரோஷியா சென்றார். குரோஷியா சென்ற பிரதமர் மோடி அங்கு, அந்நாட்டு ஜனாதிபதி சோரன் மிலனொவ் மற்றும் பிரதமர் பென்கொவிக்கை சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

# கொரோனா பரவல் காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கா?

## தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, ஜூன் 19-**

கொரோனா பரவல் காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலுக்கு மறுப்பு தெரிவித்துள்ள தமிழ்நாடு அரசு, அது தொடர்பாக விளக்கம் அளித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாகவே கொரோனா தொற்று மீண்டும் தலைகாட்ட தொடங்கி இருக்கிறது. தற்போது நிலவரப்படி 222 பேர் சிகிச்சையில் உள்ளனர். இந்தநிலையில், தமிழ்நாட்டில் கொரோனா பரவல் காரணமாக வருகிற 22-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஊரடங்கு அறிவிப்பதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாக ஒரு வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. இதனை பலரும் தங்களது உறவினர்கள், நண்பர்களுக்கு பகிர்ந்து வருகின்றனர்.

இதுகுறித்து தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:- இது பழைய வீடியோ. 2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் கொரோனா பரவல் காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு அறிவிப்பதாக வெளியான செய்தியை தற்போது வெளியான செய்தி போல் தவறாக பரப்பி வருகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தொடரை வென்ற தென் ஆப்பிரிக்கா



தென் ஆப்பிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் இரு ஆட்டங்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன. இந்நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3வது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்கா 45.5 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 278 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதையடுத்து தென் ஆப்பிரிக்காவின் இன்னின்ஸ் அத்துடன் முடிக்கப்பட்டது.

தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக டிரிஸ்டன் பிரிட்ஸ் 101 ரன்கள் எடுத்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அபி ப்ளெட்சர் 3 விக்கெட் வீழ்த்தினார். மழை நின்றபின் மீண்டும் ஆட்டம் தொடங்கிய நிலையில் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி வெஸ்ட் இண்டீஸ் மகளிர் அணிக்கு 39 ஓவர்களில் 288 ரன்கள் என்ற இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை நோக்கி ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 27.5 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 121 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 166 ரன் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற செட் கணக்கில் தென் ஆப்பிரிக்கா கைப்பற்றியது.

# தொடரை வெல்வோம் - ஷர்துல்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்வோம் என ஷர்துல் தாக்கூர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, வித்தியாசமான சவால்களை அளிக்கும் இங்கிலாந்து ஆடுகளங்களில் விளையாடவுள்ளது மிகவும் உற்சாகமாக இருப்பதாக நினைக்கிறேன். இங்கிலாந்தில் நிலவும் வானிலையை முதலாவதாகக் கூறுவேன். சில நேரங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும், சில நேரங்களில் சூரியன் பிரகாசமாக உள்ள நாளாக இருக்கும். வானிலை எப்படி இருப்பினும், வீரர்கள் அதற்கேற்றவாறு தங்களை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்.

அணியில் புதிய ஆற்றல் இருப்பது நல்ல விஷயம். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் நிறைய இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள். அணியில் திறமையான இளம் வீரர்கள் இடம்பெறுவது எப்போதும் உற்சாகமளிப்பதாக இருக்கும். இங்கிலாந்து அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய யுக்தியை பின்பற்றி விளையாடி வருகிறார்கள்.

வெளிநாடுகளில் தொடர்களைக் கைப்பற்றுவது எப்போதும் சிறப்பான விஷயமாக இருக்கும். இங்கிலாந்தில் நாங்கள் தொடரைக் கைப்பற்றினால், அது ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் மிகப் பெரிய விஷயமாக இருக்கும். இங்கிலாந்தில் தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# அஸ்வினின் டிரெய்லர் வெளியீடு

இந்திய கிரிக்கெட் ஜாம்பவானும் சிஎஸ்கே வீரருமான ரவிச்சந்திரன் அஷ்வினின் கிரிக்கெட் பயணத்தை ஆவணப்படமாக சென்னை சூப்பர் கிங்ஸ் எடுத்துள்ளது. இந்த ஆவணப்படத்தின் டிரெய்லர் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இன்று சிஎஸ்கே யூடியூப் சேனலில் இந்த ஆவணப்படம் வெளியாகும் என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அறிவித்துள்ளது. டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தியுள்ள அஸ்வின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று IPL, TNPL போட்டிகளில் தற்போது விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆக்சியம் 4 திட்டம் மீண்டும் ஒத்திவைப்பு:

# சுபான்ஷு சுக்லாவின் விண்வெளி பயணம் மேலும் தள்ளிப்போனது



**புதுடெல்லி, ஜூன் 19-**

ஆக்சியம் 4 திட்டம் மீண்டும் ஒத்திவைப்பால் இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவின் பயணம் மேலும் தள்ளிப்போகியுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஆக்சியம் ஸ்பேஸ் என்னும் தனியார் நிறுவனத்தின் 'ஆக்சியம் -4' விண்வெளி பயணம் திட்டமிடப்பட்டு உள்ளது. பால்கன்-9 ராக்கெட் மூலம் ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத்தில் இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா மற்றும் 3 பேர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்கின்றனர்.

இதற்கான பணிகள் முடிக்கப்பட்டு ராக்கெட் தயார் நிலையில் உள்ளது. இந்த ராக்கெட் கடந்த மாதம் 29-ம் தேதி விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டது. ஆனால் சில தொழில்நுட்ப பணிகளுக்காக ராக்கெட் ஏவுதலை கடந்த 8-ம் தேதிக்கு மாற்றி வைத்தனர். இந்தநிலையில் மோசமான வானிலை காரணமாக மீண்டும் தேதி மாறப்பட்டு கடந்த 10-ம் தேதி மாலை 5.52 மணிக்கு ஏவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதற்கான நாள் நெருங்கி வந்தபோது, ராக்கெட் என்ஜினில் திரவ ஆக்சிஜன் கசிவு இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுப்பிடித்தனர். இதனால் கடந்த 11-ம் தேதி மாலை 5.30 மணிக்கு ராக்கெட் ஏவுதல் நிகழ்ச்சி தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. தொடர்ந்து 19-ம் தேதி ராக்கெட் விண்ணில் ஏவப்படும் என்று கடந்த 13-ம் தேதி அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 வீரர்கள், இன்று சர்வதேச விண்வெளி மையத்திற்கு மேற்கொள்ள இருந்த பயணம் மீண்டும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த பயணம் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 22-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) இந்திய நேரப்படி சரியாக மதியம் 1.12 மணிக்கு ராக்கெட்டை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. மீண்டும் மீண்டும் இந்த திட்டம் தள்ளிவைக்கப்படுவதால் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் விண்வெளி வீரர்கள் மன அழுத்தத்தில் இருக்கிறார்கள்.

# மாணவி ஞானதர்ஷினியின் கனவு நிச்சயம் நிறைவேறும்

## அமைச்சர் அன்பில் மகேஷ் உறுதி

**சென்னை, ஜூன் 19-**

முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்த புதுக்கோட்டை மாணவி ஞானதர்ஷினியின் கனவு நிச்சயம் நிறைவேறும் என்று அமைச்சர் உறுதி அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் குருங்களூர் கிராமத்தை சேர்ந்த 10-ம் வகுப்பு படிக்கும் ஞானதர்ஷினி என்ற மாணவி முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதிய கடிதம் நாளிதழில் வெளியாகி இருந்தது. அக்கடிதத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, வணக்கம். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குருங்களூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகிறேன். இந்தப் பள்ளியில் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் மகள்களும், மகன்களும்தான் படித்து வருகிறோம். மாணவர்களுக்கான உதவித்தொகை, நான் முதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம் போன்று பல நல்ல திட்டங்களை எங்களுக்காகச் செய்திருக்கிறீர்கள். இதற்காகத் தங்களுக்கு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதை எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம். உங்களிடம் இரண்டு கோரிக்கை, எங்கள் பள்ளியைச் சுற்றி சுவர் எழுப்பினால், தோட்டம் அமைத்து, தூய்மையாகப் பராமரிக்க முடியும். அப்படியே ஸ்மார்ட் வகுப்பறையும் அமைத்துக் கொடுத்தீர்கள் என்றால் எங்களின் கனவு நிறைவேறிவிடும் என்று தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், இக்கடிதத்தை மேற்கோள்காட்டி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எக்ஸ் தள பக்கத்தில், அன்பு மாணவி ரா.ஞானதர்ஷினியின் கனவு நிச்சயம் நிறைவேறும். முதலமைச்சரின் வழிகாட்டுதலின் படி, மாணவியின் இரண்டு கோரிக்கைகளும் விரைவில் நிறைவேற்றப்படும். இன்றே குருங்களூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு ஆணையிட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்.

## டாஸ்மாக் கடைகள் மீது

# மக்கள் புகார் தந்தால் 30 நாட்களில் நடவடிக்கை: தமிழக அரசு உத்தரவு

**சென்னை, ஜூன் 19-**

டாஸ்மாக் கடைகள் மீது மக்கள் புகார் தந்தால் 30 நாட்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 777 டாஸ்மாக் கடைகள் உள்ளன. இந்த கடைகள் அமைக்கும் போது, கல்வி நிறுவனங்கள், ஆஸ்பத்திரிகள் மற்றும் வழிபாட்டு தலங்களில் இருந்து நகர் பகுதியாக இருந்தால் 50 மீட்டரும், கிராமப்புறங்களில் 100 மீட்டர் தூரமும் இருக்க வேண்டும். ஆனால் இந்த விதிகளை மீறி பல கடைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இது குறித்து பொதுமக்கள் அந்தந்த மாவட்ட கலெக்டரிடம் முறையிட்டு தீர்வு காணலாம். அதேபோல் சில இடங்களில் கடைகள் வந்த பிறகு வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவை வந்திருக்கும். இந்த கடைகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருந்தது.

இந்த நிலையில் தமிழக அரசு அதற்கான விதியில் மாற்றம் கொண்டு வந்துள்ளது. அதன்படி கடை வந்த பிறகு கல்வி நிறுவனங்கள், வழிபாட்டு தலங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு இருந்தாலும், அந்த கடைகள் மீது புகார்கள் வந்தால் அதனை கலெக்டர் பரிசீலனை செய்து 30 நாட்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

# முஷ்ஃபிகுர் ரஹிம் சாதனை

வங்கதேச கிரிக்கெட் வீரர் முஷ்ஃபிகுர் ரஹிம் கில்கிறிஸ்டை முந்தி அதிக ரன்கள் எடுத்தவர் என்ற உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வங்கதேசம் முதல் இன்னிங்ஸில் 423/4 ரன்கள் குவித்துள்ளது. மழையின் காரணமாக போட்டி நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் முஷ்ஃபிகுர் ரஹிம் 159 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருக்கிறார். இத்துடன் டெஸ்ட்டில் 6,214 ரன்கள், ஒருநாள் போட்டிகளில் 7795 ரன்கள், டி20யில் 1500 ரன்கள் என மொத்தமாக 15,509 சர்வதேச ரன்களை குவித்துள்ளார்.

சர்வதேச போட்டிகளில் ஒரேயொரு பந்துகூட வீசாமல் அதிக ரன்கள் அடித்தவர்கள் பட்டியலில் 15,509 ரன்களுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இதற்கு முன்பாக ஆஸி.யின் ஆடம் கில்கிறிஸ்ட் 15,461 ரன்களுடன் முதலிடத்தில் இருந்தார். இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடத்தில் இருப்பவர்கள் 1. முஷ்ஃபிகுர் ரஹிம் - 15, 509, 2. ஆடம் கில்கிறிஸ்ட் - 15, 461, 3. குவிண்டன் டிகாக் - 12, 654. இந்தியாவின் எம்.எஸ்.தோனி அதிக ரன்கள் அடித்திருந்தாலும் அவர் பந்துவீசி இருப்பதால் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சினிமா CINI செய்திகள்

## ஜூலை 4-ல் வெளியாகும் 'பறந்து போ'



ஜியோ ஹாட்ஸ்டார் - ஜிகேஎஸ் புரொடக்ஷன் - செவன் சீஸ் & செவன் ஹில்ஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் ராம் இயக்கியிருக்கும் படம் பறந்து போ. ஜூலை 4 அன்று வெளியாக உள்ள இப்படத்தில் சிவா, கிரேஸ் ஆண்டனி, மாஸ்டர் மிதுன் ரியான், அஞ்சலி, அஜு வர்கீஸ், விஜய் யேசுதாஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்நிலையில் இப்படத்தின் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு இயக்குநர் மிஷ்கின் பேசுகையில், சீக்கிரம் சினிமாவை விட்டு போக வேண்டும் என்று நான் நினைக்கிறேன். சினிமாவில் அவ்வளவு சந்தோஷமாக நான் இல்லை. மிகவும் சந்தோஷமாக படங்கள் செய்த காலம் போய்விட்டது. இப்போது அதிக போட்டி இருக்கிறது.

ராம் படங்களை பார்க்கும் பொழுது எப்போதுமே அதிசயம் போல தான் இருக்கும். 'பறந்து போ' படமும் நிச்சயம் குடும்பங்கள் ரசிக்கும் வகையில் இருக்கும் என்றார்.

இயக்குநர் ராம் பேசுகையில், சிவா, கிரேஸ் போன்ற திறமையான நடிகர்களை என் படத்தில் பயன்படுத்திக் கொண்டது மகிழ்ச்சி. இந்த செட்டில் தான் நான் ரிலாக்ஸாக இருந்தேன்.

ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் இந்தப் படத்தை வெளியிடுவது எங்களின் பெரும் பலம். படம் நிச்சயம் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும்." என்றார்.

## அதர்வா நடிக்கும் 'டி.என்.ஏ.'




ஒலிம்பியா மூவிஸ் அம்பேத்குமார் தயாரிப்பில் நெல்சன் வெங்கடேசன் இயக்கத்தில் அதர்வா நடிக்கும் படம் டி என் ஏ' (DNA) இந்த திரைப் படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் படக்குழுவினருடன் இயக்குநர்கள் மாரி செல்வராஜ், ராஜூ முருகன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.


இந்நிகழ்வில் நடிகர் அதர்வா பேசுகையில், இந்த படத்தின் இயக்குனர் கதையை என்னிடம் சொல்லும் போது படத்தின் டைட்டில் டி என் ஏ என்றார். ஜெனிடிக் தொடர்பான சயின்டிபிக் பிக்ஷன் கதையாக இருக்கும் என நான் நினைத்தேன். ஆனால் அவர் டி என் ஏ என்றால் திவ்யா அண்ட் ஆனந்த் என சொன்னார் என்றார்.

பின்னர் பேசிய இயக்குனர் நெல்சன் வெங்கடேசன், படத்தின் கதையை நான் தயாரிப்பாளர் அம்பேத்குமாரிடம் சொன்ன பிறகு, அவர்தான் எல்லோரிடமும் சொன்னார். அந்த வகையில் இந்த படத்தை இயக்குவதற்கான வாய்ப்பு அளித்ததற்காக அவருக்கு நன்றி என்று கூறினார். இப்படம் இம்மாதம் 20 அன்று வெளியாக இருக்கிறது.



துணை முதலவர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி செம்மொழி பூங்காவில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சுற்றிலும் தடுப்பு வலையுடன் அமைக்கப்பட்டுள்ள மின்னொளி விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து மகளீர் கைப்பந்து போட்டியை தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர் பெரியகருப்பன், தமிழரசி எம்.எல்.ஏ, கலெக்டர் ஆஷா அஜித், சார்ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், பேரூராட்சி தலைவர் கோகிலாராணி உள்பட அரசு அலுவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## ரேவதி இயக்கத்தில் 'குட் ஒய்ஃப்'



நடிகை ரேவதி இயக்கத்தில் பிரியாமணி மற்றும் சம்பத் ராஜ் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'குட் ஒய்ஃப். ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியாக இருக்கும் இந்த 'குட் ஒய்ஃப். தொடரின் டீசர் சமீபத்தில் வெளியானது.

பிரியாமணி மற்றும் சம்பத் ராஜ் நடித்திருக்கும் இந்தத் தொடரை நடிகை ரேவதி இயக்கியுள்ளார். இதே சீரிஸ் இந்தியிலும் 'தி டிரையல் பியார், கனூன், தோகா' என்ற பெயரில் கஜோல் மற்றும் ஜிஷூ சென்குப்தா நடிப்பில் உருவானது. இது ஜியோஹாட்ஸ்டாரில் வெளியாகி பெரும் வெற்றி பெற்றது. இப்போது தமிழ் ரசிகர்ளுக்கு ஏற்றபடி இந்த தொடர் உருவாகியுள்ளது.

இது குறித்து இத்தொடரின் இயக்குனர் ரேவதி பேசுகையில், இந்தக் கதையில் கதாநாயகி பாத்திரம் மிகவும் வலுவானது. தனிப்பட்ட உணர்வுகள் மற்றும் தொழில் சார்ந்தும் நிறைய சவால்களை அவர் எதிர்கொள்கிறார். இதனை திரைக் கதையில் இருந்து படமாக்குவதை மிகவும் விரும்பி மகிழ்ச்சியாக செய்தேன் என்றார்.

## உமாபதி தயாரிக்கும் 'ஹும்' திரைப்படம்




ஃபர்ஸ்ட் லைன்' உமாபதி தயாரிப்பில், எஸ். கிருஷ்ண வேல் இயக்கத்தில் புதுமுகங்கள் கணேஷ் கோபிநாத் - ஐஸ்வர்யா முதன்மையான வேடங்களில் நடித்திருக்கும் 'ஹும்' எனும் திரைப் படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் படக்குழுவினருடன் இயக்குநர் கே. பாக்யராஜ், பாடலாசிரியர் விவேகா, இயக்குநர்கள் எல். சுரேஷ், இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் படத்தின் இசை மற்றும் முன்னோட்டத்தை இயக்குநர் கே பாக்யராஜ் வெளியிட சிறப்பு விருந்தினர்கள் மற்றும் படக்குழுவினர் பெற்றுக் கொண்டனர். விழாவில் தயாரிப்பாளர் உமாபதி பேசுகையில், என்னுடைய நண்பர் கிருஷ்ணவேல் ஒரு படத்தை தயாரித்து நிறைவு செய்திருந்தார். ஆள் இல்லாத படம் என்றார். அதன் பிறகு ஒரு நாள் அந்தப் படத்தை காண்பித்தார். அரை மணி நேரம் கடந்தது கூட தெரியவில்லை. சுவாரசியமாக இருந்தது. இதுவரை யாரும் அது போன்ற முயற்சியை மேற்கொண்டதில்லை. புதிதாக இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது அதன் பிறகு விவாதித்தோம். அதனைத் தொடர்ந்து அந்தப் படத்தை மீண்டும் தயாரிக்க தொடங்கினோம். நண்பர்களின் உதவியுடன் இப்படத்தின் பணிகளை இப்போது நிறைவு செய்திருக்கிறோம் என்றார்.

### ஒட்டன்சத்திரம் அருகே
## பேத்திகளை கொன்று பாட்டிகள் தற்கொலை

**ஒட்டன்சத்திரம், ஜூன் 19-**

ஒட்டன்சத்திரம் அருகே மகள் வேறு ஒருவருடன் சென்றதால், அவரின் தாய், பாட்டி ஆகியோர் இரண்டு பேத்திகளையும் கொலை செய்து விட்டு, தாங்களும் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதிவாசிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அடுத்த இடையகோட்டை அருகேயுள்ள சின்ன குளிப்பட்டியைச் சேர்ந்தவர் பவித்ரா (27). இவர் கணவர் பிரபாகரனுடன் பள்ளபட்டி அருகே சவுந்தராபுரத்தில் வசித்து வந்தார். இவர்களுக்கு 2 மகள்கள் இருந்தனர். தம்பதி இடையே அடிக்கடி தகராறு ஏற்படுவதும், தொடர்ந்து பவித்ரா தன் தாய் வீட்டுக்கு வந்துவிடுவதும் வாடிக்கையாக இருந்துவந்துள்ளது.

அவ்வாறாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு கணவரைப் பிரிந்து வந்த பவித்ரா, தனது மகள்கள் லித்திக்ஸா ( 8 ), தீப்திகா ( 5 ) ஆகியோருடன் சின்னக் குளிப்பட்டியில் உள்ள தனது தாய் காளீஸ்வரி வீட்டில் வசித்து வந்தார். நேற்று முன்தினம் வீட்டில் இருந்து வெளியே சென்ற பவித்ரா வீடு திரும்பாததால் அவரைத் தேடினர். இந்நிலையில் அவர் வேறு ஒருவருடன் சென்றது தெரியவந்தது. இதனால் மனமுடைந்த காளீஸ்வரி (47) தனது தாய் செல்லம்மாள் (65) உடன் சேர்ந்து, பேத்திகள் லித்திக்ஸா, தீப்திகா ஆகியோரை கொலை செய்து தூக்கில் தொங்கவிட்டு, தாங்களும் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த ஒட்டன்சத்திரம் டி.எஸ்.பி. கார்த்திகேயன் தலைமையிலான போலீஸார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக , திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பிவைத்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, நான்கு பேர் பலியான சம்பவம், அந்த கிராமத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. காணாமல் போன பவித்ராவை இடையகோட்டை போலீஸார் தேடி வருகின்றனர்.

## 'மெட்ராஸ் மேட்னி' படக்குழு நன்றி




குடும்பஸ்தன்', 'டூரிஸ்ட் பேமிலி' வரிசையில் மிகச்சாதாரணமான மனிதர்களையும் குடும்ப அமைப்பின் வலிமையையும் வெளிக்காட்டுகிற இன்னொரு வெற்றிப்படமாக மாறியிருக்கிறது 'மெட்ராஸ் மேட்னி'. திரைப் படம். கடந்த ஜூன் 6 அன்று வெளியான இப்படத்தை கார்த்திகேயன் மணி இயக்கியுள்ளார்.

இந்தப்படத்தில் காளி வெங்கட், ஷெல்லி, ரோஷினி ஹரிப்ரியன், விஸ்வா, சாம்ஸ், ஜார்ஜ் மரியான், சுனில் சுஹாதா, மதுமிதா, விஜய் டிவி ராமர், கீதா கைலாசம் ஆகியோருடன் சத்யராஜும் நடித்திருந்தார். ஒரு மிடில் கிளாஸ் மனிதனின் வாழ்க்கையில் நேரும் சந்தோஷம் துக்கம் பற்றிய கதை இது. இப்படம் இப்போது மக்களின் அமோக ஆதரவை பெற்றுள்ளது. படம் பார்க்கும் ஒவ்வொருவரும் அவர்களுடைய அப்பாவை நினைத்துக் கொள்ளும் விதமாக, ஆழமான நடிப்பால் கொள்ளையடிக்கிறார் காளி வெங்கட். சின்ன விஷயங்களிலும் நம்பகத்தன்மையை உருவாக்கி சிறந்த படைப்பைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர். இந்நிலையில் வெற்றிப்படமாக்கிய ரசிகர்களுக்கும் பத்திரிக்கையாளர்களுக்கும் படக்குழுவினர் நன்றி தெரிவித்தனர். அப்போது பேசிய காளி வெங்கட், சத்யராஜூடன் நடிக்க வாய்ப்பு இல்லாமல் போனது வருத்தமளிப்பதாக தெரிவித்தார்.

## வரிச்சியூர் செல்வம் மீதான கொலை வழக்கு விருதுநகர் கூடுதல் நீதிமன்றத்துக்கு மாற்றம்

**ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 19-**

மதுரையைச் சேர்ந்த ரவுடி வரிச்சியூர் செல்வம் மீதான கொலை வழக்கை விருதுநகர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றிய முதன்மை மாவட்ட நீதிபதி ஜெயக்குமார், ஜூலை 14-ம் தேதி விசாரணைக்கு ஆஜராக உத்தரவிட்டார்.

மதுரை மாவட்டம் வரிச்சியூர் பகுதியை சேர்ந்த ரவுடி செல்வராஜ் என்ற வரிச்சியூர் செல்வம். இவரது கூட்டாளியான விருதுநகர் அல்லம்பட்டியைச் சேர்ந்தவர் செந்தில்குமார்(32) கடந்த 2021-ம் ஆண்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் வரிச்சியூர் செல்வம் உள்ளிட்ட 7 பேர் மீது 2023 ஜூன் மாதம் விருதுநகர் கிழக்கு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். வழக்கு விசாரணை விருதுநகரில் உள்ள நீதித்துறை நடுவர் மன்றம் எண் 2- ல் நடைபெற்று வந்தது. இந்த வழக்கை ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றி நீதித்துறை நடுவர் ஐயப்பன் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்த போது குற்றம் சாட்டப்பட்டுள்ள வரிச்சியூர் செல்வம், கிருஷ்ணகுமார், ஈஸ்வர் சாய் தேஜூ, சதீஷ்குமார், லோகேஷ், சகாய டென்னிஸ் சரண் பாபு, பாலசுப்பிரமணியம் ஆகிய 7 பேரும் ஆஜராகினர். வழக்கு விசாரணையை விருதுநகரில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றிய நீதிபதி ஜெயக்குமார், ஜூலை 14-ம் தேதி 7 பேரும் ஆஜராக உத்தரவிட்டார்.

## படப்பிடிப்பை தொடங்கி வைத்த புதுச்சேரி முதல்வர்



விதா ஸ்டுடியோ P.R விஜய் தயாரிக்கும் படம் பிட் பாக்கெட் இப்படத்தில் P. R. விஜய், யோகலட்சுமி, பவன் கிஷோர், சுந்தர், அலெக்ஸ், இயன், கிறிஸ்டியன், சந்தீப், காந்திபன் ஆகியோர் நடிக்கிறார்கள். படத்துக்கு ஒளிப்பதிவு – பிரேம், இசை – ஷாஜ கான், எடிட்டிங் – அருண்குமார், மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ். கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் J.S. ஜூபேர் அகமத். படம் பற்றி இயக்குனர் J. S. ஜூபேர் அகமத் கூறுகையில், ஒரு நாள் இரவு 7 மணிக்கு துவங்கி அதிகாலை 4 மணிக்கு முடியும் கதை தான் இதன் ஒன் லைன். பிக்பாக்கெட் திருடர்களை நாம் இன்றுவரை சாதாரணமாக நினைக்கிறோம்.

ஆனால் அவர்களுக்கு பின்னால் ஒரு பெரிய மாஃபியா கும்பல் செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பதை விறுவிறுப்பான திரைக்கதையோடு சொல்கிறோம் என்றார். சமீபத்தில் பூஜையுடன் தொடங்கிய இந்த படத்தின் படப்பிடிப்பை புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைத்து படக்குழுவிற்கு ஆசி வழங்கினார்.

### உலக சாதனை படைத்த மதுரை
## சிலம்ப வீரர் கவின் சூரியவர்தனுக்கு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பாராட்டு

**மதுரை, ஜூன் 19-**



சிலம்பத்தில் உலக சாதனை படைத்த மதுரையைச் சேர்ந்த மாணவர் கவின் சூரியவர்தனுக்கு அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மதுரை சி.இ.ஓ.ஏ பள்ளியில் பயிலும் மாணவர் கவின் சூரியவர்தன். சிலம்பத்தில் மிகவும் ஆர்வமுள்ள இவர், கடந்த 2 ஆண்டுகளாக முறையாக சிலம்பம் கற்று பல்வேறு இடங்களில் பல போட்டிகளில் பங்கேற்று ஏராளமான சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற சாதனைப் போட்டியில் 10 மணி நேரம் 15 நிமிடம் சிலம்பம் சுழட்டி உலக சாதனை படைத்தார்.

இதற்காக உலக சாதனை படைத்த கவின் சூரிய வர்தனுக்கு நோபல் புக் ஆப் ரெக்கார்ட், விர்டியு புக் ஆப் ரெக்கார்ட், நட்சத்திரா அகாடமி, கலாம் புக் ஆப் ரெக்கார்ட், வேர்ல்ட் வைட் இன்டர்நேஷனல் புக் ஆப் ரெக்கார்ட் போன்ற 5 நிறுவனங்கள் உலக சாதனைக்கான சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கி உள்ளது.

இந்த உலக சாதனை படைத்த மாணவர் கவின் சூரியவர்தனை தகவல் தொடர்புத்துறை அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜனை, உலக சாதனைக்கான சான்றிதழ் மற்றும் பதக்கங்களுடன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். கவின் சூரியவர்தனின் உலக சாதனையை அறிந்த முக்கிய பிரமுகர்கள், சிலம்பக் கலை வல்லுநர்கள், நண்பர்கள் பாராட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஹெலிகாப்டர் தளம், சோலார் வசதியுடன்
## மதுரை எய்ம்ஸ் மருத்துவப்பணிகள் 2027-ம் ஆண்டு நிறைவடையும்
### கட்டமைப்புகள் குறித்து 3டி வீடியோ வெளியீடு

**மதுரை, ஜூன் 19-**

ஹெலிகாப்டர் தளம், சோலார் வசதியுடன் மதுரை எய்ம்ஸ் மருததுவமனை பணிகள் வருகிற 2027-ம் ஆண்டு நிறைவடையும் என்று 3டி வீடியோ வெளியீடு செய்யப்பட்டது.

மதுரை அருகே தோப்பூரில் இந்திய அறிவியல் நிறுவனம் சார்பில் 'எய்ம்ஸ்' மருத்துவமனை 222 ஏக்கரில் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடக்கின்றன. முதற்கட்ட கட்டுமானப் பணிகள் 2026-ம் ஆண்டும், 2-ம் கட்டப் பணிகள் 2027-ம் ஆண்டும் நிறைவுபெற உள்ளன. 900 படுக்கைகளுடன் அமையும் இந்த மருத்துவமனையில் ஹெலிபேடு, குறுங்காடு, பிரமாண்ட மருத்துவக் கட்டிடப் பிரிவுகள், விசாலமான சாலைகள், மேற்கூரையுடன் கூடிய கார் பார்க்கிங் போன்றவை அமைய இருக்கின்றன. இந்த கட்டிடத்தின் மாதிரி வடிவத்தின் 3டி வீடியோவை மதுரை 'எய்ம்ஸ்' நிர்வாகம் தங்களுடைய 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டது. 4 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த வீடியோ 'எய்ம்ஸ்' மருத்துவமனையின் பிரம்மாண்டத்தை நமது கண்முன் நிறுத்துகிறது. வீடியோவின் தொடக்கத்தில், ஒரு ஹெலிகாப்டர் 'எய்ம்ஸ்' கட்டிடத்தின் மொட்டை மாடியில் அமைக்கப்பட்ட ஹெலிபேடில் இறங்குகிறது. அதன் தொடர்ச்சியாக 'எய்ம்ஸ்' மருத்துவமனை வளாகத்தில் அமைய உள்ள மருத்துவக் கல்லூரி கட்டிடம், மாணவர்கள் தங்கும் விடுதி, கலையரங்கம், அவசர சிகிச்சை பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, செவிலியர்கள் கல்லூரி, நிர்வாக அலுவலகம், ஆயூஸ் மருத்துவமனை கட்டிடம், விளையாட்டு மைதான வளாகம், மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் தங்கும் குடியிருப்பு என ஒவ்வொரு கட்டிடமாக காட்டப்பட்டுள்ளது.

மருத்துவமனை நுழைவு வாயிலில் இருந்து, பல்வேறு கட்டிடங்களுக்கு செல்வதற்கு விசாலமான சாலைகள், சாலைகளின் இருபுறமும் அலங்கார மரங்கள், நிழல் தரும் மரங்கள், செடிகள் என பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக தெரிகிறது. இதன் கட்டிட அமைப்பு இதுவரை எந்த மருத்துவமனைகளிலும் பார்த்திராத வகையில் தனியார் மருத்துவமனை கட்டிடங்களையும் விஞ்சும் வகையில் நவீனமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பாக வளாகத்தில் நடந்து செல்வதற்கு தனி நடைபாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. எய்ம்ஸ் மருத்துவமனை கட்டிட முகப்பின் முன் இந்திய தேசியக் கொடி பறக்கும் கொடிக்கம்பமும் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு தளத்துக்கும் செல்ல எஸ்கலேட்டர் படிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நோயாளிகள், மருத்துவர்கள், பணியாளர்களுக்கு விசாலமான வாகன நிறுத்துமிடமும் அமைக்கப்பட்டுள்ளது. மின்தடை ஏற்பட்டால் உடனடியாக மின்சாரம் வழங்க மிகப்பெரிய ஜெனரேட்டர் வளாகமும், சோலார் பேனர்களுடன் கூடிய சூரிய மின் சக்தி கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அந்த வீடியோவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த 'எய்ம்ஸ்' மருத்துவமனை அமையும் கட்டிடத்தையும் இந்த 3 டி வீடியோவில் பார்ப்பதற்கு பிரமிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் தற்போது இந்த வீடியோ சமூக வலைதளங்கில் வைரலாகி வருகிறது. வீடியோவில் உள்ளபடி கட்டடிட அமைப்பும், வசதிகளும் அமையும் பட்சத்தில், 'எய்ம்ஸ்' மருத்துவமனை மதுரைக்கு மட்டுமல்லாது தென் தமிழகத்தின் ஒரு அடையாளமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

## முருக பக்தர்கள் மாநாடை முன்னிட்டு சென்னை - மதுரைக்கு சிறப்பு ரயில்

**சென்னை, ஜூன் 19-**

முருக பக்தர்கள் மாநாடை முன்னிட்டு சென்னையில் இருந்து மதுரைகு சிறப்பு ரயில்கள் இயக்கம்.

மதுரையில் வருகிற 22-ம் தேதி நடக்கும் முருக பக்தர்கள் மாநாட்டிற்கு சிறப்பு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும், 21-ம் தேதி இரவு 9.55-க்கு, சென்னை எழும்பூரில் இருந்து புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை, 5-40 மணிக்கு மதுரை சென்றடையும். அங்கிருந்து புறப்பட்டு, காலை, 8.45-க்கு திருநெல்வேலி செல்லும். அதேபோல, 22ம் தேதி இரவு 9:40 மணிக்கு திருநெல்வேலியில் புறப்பட்டு, நள்ளிரவு, 12:30 மணிக்கு மதுரை வரும் சிறப்பு ரயில், மறுநாள் காலை, 8:15 மணிக்கு எழும்பூர் சென்றடையும். மாநாட்டிற்கு வரும் முருக பக்தர்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார். தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், சாத்தூர், கோவில்பட்டியில் நின்று செல்லும். டிக்கெட் முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு துவங்குகிறது என, தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.



சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.6.04 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கும் விதமாக நேற்று சென்னை மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி. கலந்து கொண்டனர்.

### சென்னை, மெரினா கடற்கரையில்

# 50 குடிநீர் ஏ.டி.எம்.களை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஜூன் 19-

சென்னை மெரினா கடற்கரையில் முதற்கட்டமாக 50 குடிநீர் ஏ.டி.எம்.களை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

சென்னை மாநகராட்சி பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தூய்மையான குடிநீர் வழங்கும் புதிய திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

கடற்கரை, பஸ் நிலையங்கள், பூங்காக்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சந்தைப் பகுதிகள் என மக்கள் நடமாட்டம் மிகுந்த இடங்களில் குடிநீர் ஏ.டி.எம்.கள் நிறுவப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஏ.டி.எம்.மிலும் 150 மில்லி லிட்டர் மற்றும் ஒரு லிட்டர் என இரண்டு அளவுகளில் குடிநீர் பெற்றுக் கொள்ள முடியும். பொதுமக்கள் தாங்கள் கொண்டு வரும் தண்ணீர் பாட்டில்களில் சுத்தமான நீரைப் பிடிக்கலாம்.

இந்த அதிநவீன நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் முன் வடிகட்டுதல், ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ் மற்றும் புற ஊதாக் கதிர்கள் ஆகியவற்றைக் கொண்டு தேசிய தரத்திற்கு இணையான தூய்மையான நீரை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 24 மணி நேரமும் தடையின்றி செயல்படும். நீர்இருப்பு இல்லாத நிலையிலும் கடவுச்சொல் மூலம் நீரை ரீசார்ஜ் செய்யும் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், கடைசி 50 முறை ரீசார்ஜ் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளின் விவரங்களையும் பயனர்கள் பார்க்க முடியும். இந்த விநியோக அமைப்பு பேட்டரி மூலம் இயங்குவது கூடுதல் சிறப்பாகும்.

கட்டண வசூலில் துல்லியத்தன்மையை உறுதி செய்வதற்காக ஸ்மார்ட் கார்டு மற்றும் நாணயங்கள் பயன்படுத்தும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நீர் ரீசார்ஜ் மற்றும் விநியோகம் தொடர்பான தகவல்கள் குறுஞ்செய்தி மூலம் பயனர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

இந்நிலையில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டுள்ள 50 குடிநீர் ஏ.டி.எம்.களை மெரினா கடற்கரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி செம்மொழி பூங்காவில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் சுற்றிலும் தடுப்பு வலையுடன் அமைக்கப்பட்டுள்ள மின்னொளி விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து மகளிர் கைப்பந்து போட்டியை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி, மாவட்ட கலெக்டர் ஆஷா, சார் ஆட்சியர் ஆயுஷ்வெங்கட் வட்ஸ், பேரூராட்சி தலைவர் என்.கோகிலாராணி, அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ரூ.3 ஆயிரத்திற்கு...

(1-ம் பக்க தொடர்ச்சி)

வருகிற ஆகஸ்டு 15 முதல் நடைமுறைக்கு வரும். அந்த பாஸ் செயல்பாட்டுக்கு வந்த தேதியில் இருந்து ஓராண்டுக்கோ அல்லது 200 பயணமோ, எது முதலில் வருகிறதோ அதுவரைக்கும் செல்லுபடியாகும். கார்கள், ஜீப்புகள் மற்றும் வேன்கள் போன்ற வணிகம் சாராத தனியார் வாகனங்களுக்காக இந்த பாஸ் வடிவமைக்கப்பட்டு உள்ளது என கட்காரி எக்ஸ் சமூக பதிவில் தெரிவித்து உள்ளார்.

இதன்படி, ஒரு சுங்க சாவடியை வாகனம் கடந்து சென்று விட்டால் அது ஒரு பயணம் என கணக்கில் கொள்ளப்படும். இதனால் காத்திருப்பு நேரம் குறைதல், போக்குவரத்து நெருக்கடி நீங்குதல் மற்றும் சுங்க சாவடிகளில் வாக்குவாதங்கள் குறைதல் போன்ற எளிமையான சூழல் ஏற்படும். இந்த பாஸ், கோடிக்கணக்கான தனியார் வாகன உரிமையாளர்கள் விரைவாக மற்றும் சுமூக பயண அனுபவம் பெறுவதற்கான நோக்கம் கொண்டது என கட்காரி கூறியுள்ளார்.

இதற்காக, ராஜ்மார்க் யாத்ரா செயலி, இந்திய தேசிய நெடுஞ்சாலை கழகம் மற்றும் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ வலைதளங்களில் லிங்க் (இணைப்பு) ஒன்று ஏற்படுத்தப்படும்.

இதனை கொண்டு, இந்த பாஸ்-ஐ எளிதில் செயல்பாட்டுக்கு கொண்டு வரவும் மற்றும் புதுப்பித்து கொள்ளவும் முடியும்.

## இந்தியாவிற்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

அன்று பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, அதிபர் ட்ரம்ப் பிரதமர் மோடிக்கு தொலைபேசியில் இரங்கல் தெரிவித்து பயங்கரவாதத்திற்கு எதிரான ஆதரவை தெரிவித்தார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, இரு தலைவர்களுக்கும் இடையிலான முதல் உரையாடல் இதுவாகும்.

ஆபரேஷன் சிந்தூர் பற்றி பிரதமர் மோடி அதிபர் ட்ரம்ப்பிடம் விரிவாகப் பேசினார். ஏப்ரல் 22 க்குப் பிறகு, பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான தனது உறுதியை இந்தியா முழு உலகிற்கும் தெரிவித்ததாக பிரதமர் மோடி ட்ரம்ப்பிடம் தெளிவாகக் கூறினார். மே 6-7 இரவு, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத மறைவிடங்களை மட்டுமே இந்தியா குறிவைத்ததாக பிரதமர் மோடி கூறினார். இந்தியாவின் நடவடிக்கைகள் மிகவும் அளவிடப்பட்டவை, துல்லியமானவை மற்றும் தீவிரப்படுத்தப்படாதவை என்றார்.

மே 9 ஆம் தேதி இரவு, அமெரிக்க துணை அதிபர் வான்ஸ் பிரதமர் மோடியை அழைத்தார். பாகிஸ்தான் இந்தியா மீது ஒரு பெரிய தாக்குதலை நடத்தக்கூடும் என்று வான்ஸ் கூறியிருந்தார். இது நடந்தால், பாகிஸ்தானுக்கு இந்தியா இன்னும் பெரிய பதிலடி கொடுக்கும் என்று பிரதமர் மோடி தெளிவான வார்த்தைகளில் கூறியிருந்தார். இந்தியாவின் வலுவான பதிலடியால், இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு வலியுறுத்த வேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டது. குறிப்பாக, பயங்கரவாதத்தை இந்தியா இனி ஒரு மறைமுகப் போராகக் கருதவில்லை என்று அமெரிக்க அதிபரிடம் கூறினார்'' என்றார்.



புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் நேற்று சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவியாக தலா ரூ.8 ஆயிரம் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலா பொருட்கள் அடங்கிய ரூ.4 ஆயிரம் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் அடங்கி தொகுப்பினை வழங்கினார். உடன் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், ஆணையர் மா.வள்ளலார், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் அஷிஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### கீழடி விவகாரம்: மு.க.ஸ்டாலினின் முகக்கவசம் அணிந்து

# மதுரையில் தி.மு.க. மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

மதுரை, ஜூன் 19-

கீழடி அகழாய்வு விவகாரம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினின் முகக்கவசம் அணிந்து மதுரையில் தி.மு.க. மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்திய வரலாற்றை கீழடியில் இருந்து தொடங்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை வைத்திருந்த நிலையில், கீழடியில் தமிழர்களின் தொன்மை மற்றும் வரலாற்றை மறைக்கின்ற வகையில் மத்திய அரசு செயல்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. மத்திய அரசு தமிழர்களின் பெருமையை சொல்லுகின்ற வகையில் கீழடி அகழாய்வில் தமிழர்களின் தொன்மை, தமிழர்களின் வரலாறு, தமிழர்களின் எழுத்து வடிவம் போன்றவைகளை முதல் மூன்று கட்ட ஆய்வில் கண்டுபிடித்தது. ஆனால் மத்திய தொல்லியல் துறை இன்னும் அதனை வெளியிடாமல் வைத்திருக்கிறது.

நீதிமன்றத்தில் தமிழகம் வழக்கு தொடுத்தபோது, ஆறு வார காலத்துக்குள் வெளியிடுகிறோம் என்று உறுதி அளித்து 16 மாதங்கள் கடந்தும் வெளியிடாமல் இருக்கிறது. கீழடி ஆய்வில் முதல் அறிவியல் கண்டுபிடிப்பாம் இரும்பின் தொன்மையை கீழடி அடைந்திருக்கிறது. அதன் மூலம் இரும்பு கால ஆய்வு கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆய்வினை முறைப்படி அங்கீகரிக்க வேண்டிய மத்திய அரசு அங்கீகரிக்க மறுத்து காலம் தாழ்த்தி வருகிறது.

இதனை கண்டித்து தி.மு.க. மாணவரணி சார்பில் மதுரை விரகனூர் சுற்றுச்சாலையில் நேற்று (18-ம் தேதி) 10 ஆயிரம் மாணவர்கள் பங்கு பெறுகின்ற வகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். மேலும் இதுகுறித்து அவர் வெளியிட்டிருந்த அறிக்கையில், எத்தனை எத்தனை தடைகள் நம் தமிழினத்துக்கு? அத்தனையையும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்து போராடி அறிவியல் துணை கொண்டு நம் இனத்தின் தொன்மையை நிறுவி வருகிறோம். இருந்தும் ஏற்க மறுக்கின்றன சில மனங்கள். திருத்த வேண்டியது அறிக்கைகளை அல்ல, சில உள்ளங்களை. மதுரை விரகனூரில் தி.மு.க. மாணவரணி சார்பில் நடத்தவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக கூடி மத்திய அரசுக்கு நமது தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்துவோம். அவர்களை திருத்துவோம் என்று கூறியிருந்தார்.

அதன்படி மதுரையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு காலை முதலே ஆயிரக்கணக்கான தி.மு.கவினர் விரகனூர் ரிங் ரோட்டில் திரண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு மாநில மாணவரணி அமைப்பாளர் ராஜீவ் காந்தி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. பாராளுமன்ற குழு தலைவரும், துணைப் பொதுச் செயலாளருமான திருச்சி சிவா, தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தளபதி, தமிழரசி, மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் தி.மு.க. சார்பு அணியான இளைஞரணி, மகளிரணி என அனைத்து அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

அப்போது அவர்கள் பேசுகையில், கீழடி அகழாய்வில் ஈடுபட்ட தொல்லியல் துறை ஊழியர்களை இடமாற்றம் செய்தது கண்டிக்கத்தக்கது. ஒன்று முதல் பலகட்ட ஆய்வுகள் அடிப்படையில் பல்வேறு பொருட்கள் கண்டறியப்பட்டு அது காட்சிப்படுத்தப்பட்டதுடன், அருங்காட்சியகத்தையும் தி.மு.க. அரசு அமைத்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட கீழடி அகழாய்வை தி.மு.க. அரசு ஆட்சி பொறுப்பேற்றதும் நிறைவேற்றி வருகிறது. கீழடி அகழாய்வின் மூலம் தமிழர்கள்தான் பூர்வகுடிகள் என்பதும் நிரூபிக்கப்பட்டு உள்ளது என்றனர். இதில் பங்கேற்ற தி.மு.க. தொண்டர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் போன்று முகக்கவசங்களை அணிந்துகொண்டு மத்திய அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

## ரூ.217.98 கோடி மதிப்பில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; மதுரை மாவட்டம், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் 5.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பவித்ரபுஷ்கரணி மற்றும் பொய்கை கரைப்பட்டி தெப்பக்குள படிக்கட்டுகள் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

### திருவண்ணாமலை...

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம், அருள்மிகு பயறனீஸ்வரர் திருக்கோயிலில் 4.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், அருள்மிகு வனபத்திரகாளியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 3.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், மருதூர், திரு அருட்பிரகாச வள்ளலார் அவதரித்த இல்லம் 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீண்டும் கட்டும் பணி; சென்னை, பாடி, அருள்மிகு திருவல்லீசுவரர் திருக்கோயிலில் 3.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; திருவண்ணாமலை மாவட்டம், ஆவணியாபுரம், அருள்மிகு லெட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 3.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலில் 3.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடம், அன்னதானக் கூடம் மற்றும் செயல் அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், கண்ணம்பள்ளி, அருள்மிகு வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் புதுப்பித்தல் மற்றும் முன் மண்டபம் கட்டும் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

### சென்னிமலை, திருவில்லி

தென்காசி மாவட்டம், பண்பொழி, அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், திருநாரையூர், அருள்மிகு சுயம்பிரகார ஈஸ்வரர் திருக்கோயிலில் 2.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு, தேவசம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 2.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 2.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலுடன் இணைக்கப்பட்ட அருள்மிகு கிருஷ்ணன் திருக்கோயிலில் 2.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

### புதிய அன்னதான கூடம்

திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான பூம்பாறை, அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் 1.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மூன்று நிலை இராஜகோபுரம் கட்டும் பணி; நாமக்கல் மாவட்டம், மோகனூர், அருள்மிகு காந்தமலை பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 1.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இளைப்பாறும் மண்டபம் மற்றும் விருந்து மண்டபம் கட்டும் பணிகள்; நாமக்கல், அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலர் குடியிருப்பு மற்றும் கண்காணிப்பாளர் குடியிருப்பு கட்டும் பணி; தென்காசி மாவட்டம், கரிவலம்வந்தநல்லூர், அருள்மிகு பால்வண்ணநாதசுவாமி திருக்கோயிலில் 1.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் கட்டும் பணி மற்றும் பல்நோக்கு கட்டடம் கட்டும் பணி; திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், அருள்மிகு கொண்டத்து காளியம்மன் திருக்கோயிலில் 1.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அன்னதானக் கூடம் கட்டும் பணி; நாகப்பட்டினம் மாவட்டம், பொய்கைநல்லூர், அருள்மிகு சொர்ணபுரீஸ்வர சுவாமி திருக்கோயிலில் 1.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பரவை காய்கறி சந்தை கட்டடம் கட்டும் பணி என மொத்தம் 217.98 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை முதல்வர் மு. க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். மேலும் 21.50 கோடி ரூபாய் செலவிலான 33 முடிவுற்ற பணிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.



மதுரை மேற்கு தொகுதிக்கு உட்பட்ட பைபாஸ் ரோடு துரைச்சாமி நகரில் புதிய நியாய விலைக்கடையை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார். இதில் ஜெயந்தி ராஜூ, வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், கே.ஜெயவேல், பரவை ராஜா, கு.திரவியம், வி.பி.ஆர்.செல்வகுமார், பைக்காரா கருப்பசாமி, பகுதி முத்துவேல், பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், எம்.ஏ.நாசர், சி.ஆர்.கதிரவன், மார்க்கெட் மார்நாடு, திடீர்நகர் பாலா, லக்கி முனீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.